மலர் (Volume) 9 - இதழ் (Issue) 7

ஜூலை 2016

₹10/-

# தமிழ்நாடு நுகர்வோர் கவசம்

Tamilnadu Nugarvor Kavasam

வெளியிடுவோர்: தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் ஆற்றலூட்டும் சங்கம். உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தமிழ்நாடு அரசு




## மருத்துவ சேவை நிறுவனங்கள்

# ஆசிரியர் குழு

**பதிப்பாசிரியர்**
திரு.சூ.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப.
முதன்மை செயலர்/ஆணையர்

**மேலாண்மை இதழாசிரியர்**
திருமதி. பெ. ரமண சரஸ்வதி, பி.டெக்
இணை ஆணையர்

**உறுப்பினர்கள்**
திரு. இரா. விஜயகுமார்
துணை ஆணையாளர்-II (பொ)

திருமதி. நிர்மலா தேசிகன்
திரு. எம்.ஆர். கிருஷ்ணன்
திரு. ஜி. சந்தானராஜன்

**இதழாசிரியர்**
திரு. இர. ரமேஷ்
துணை ஆணையர் - 1(பொ)

**தொகுப்பு**
**கன்ஸ்யூமர்ஸ் அசோசியேஷன் ஆப் இந்தியா**
3/242, ராஜேந்திரா கார்டன்,
வெட்டுவாங்கேணி, சென்னை-115.

**வடிவமைப்பு**
வெப் மோட்சா,
ஆர்.ஏ.புரம், சென்னை - 600 028.

**அச்சிட்டோர்**
மல்டிகிராப்ட்
9 அப்பாவு கிராமணி 2வது தெரு,
மந்தைவெளி, சென்னை - 600 028.

Published by S.Gopalakrishnan, I.A.S., Principal Secretary / Commissioner of Civil Supplies and Consumer Protection, Office of the Commissioner of Civil Supplies and Consumer Protection, 4th floor, Ezhilagam, Chepauk, Chennai – 600 005

Printed by Sathiyamoorthi, Multicraft, No.9, Appavoo Gramani, 2nd Street, Mandavali, Chennai – 600 028.

Editior: : R. Ramesh, Deputy Commissioner I (i/c)

**அன்பார்ந்த நுகர்வோரே!**

முடி உதிர்தல், வழுக்கைத் தலை போன்ற பிரச்னைகளால் பாதிக்கப்பட்டவர்களைக் குறிவைத்து ஊர்கள் தோறும் அழகு நிலையங்கள் புற்றீசல்போல முளைத்துள்ளன. இவர்களின் கவர்ச்சிகரமான விளம்பரங்களால் ஈர்க்கப்பட்டு, ஆயிரக்கணக்கில் பணத்தை இழப்பதுடன், கண்ட கண்ட எண்ணெய்கள், க்ரீம்களைத் தேய்த்து இருக்கும் முடியையும் பறிக்கொடுத்துவிட்டு பலர் பரிதாபமாகக் காட்சி அளிக்கிறார்கள். முடி மாற்றுச் சிகிச்சை அளிக்க, பிளாஸ்டிக் சர்ஜரி மற்றும் டெர்மடாலஜி பயிற்சி முடித்திருக்க வேண்டும். ஆனால், பெரும்பாலான அழகு நிலையங்களில் அனுமதி இல்லாமல் முடி நடும் சிகிச்சையை அளிக்கிறார்கள். இதனைக் குறித்த சிறப்புக்கட்டுரை இவ்விதழில் இடம் பெற்றுள்ளது.

மேலும் வாசகர்களாகிய தங்களுக்கு தேவையான பல நுகர்வோர் செய்திகளை உள்ளடக்கி இவ்விதழ் வெளியாகி உள்ளது. அதனை முழுவதும் படித்து பயன் பெறும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நுகர்வோர் நலன் தொடர்பான பல கட்டுரைகள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளது. அதனைப் படித்து பல செய்திகளை அறிந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வழக்கம் போலவே நுகர்வோர் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நுகர்வோர் தீர்ப்புகள் பகுதியில் நுகர்வோர் பிரச்சினை தொடர்பான புகார்களும் அதற்கு அளிக்கப்பட்ட தீர்ப்புகளும் விரிவாக இப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. அதனைப் படித்து நுகர்வோர்கள் விழிப்புணர்வு அடையும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தங்களிடம் இருந்து வரும் ஆதரவே எங்களை மேன்மேலும் சிறப்பாக இயங்க வழிவகுக்கும். எனவே தொடர்ந்து தங்களது ஆதரவினை அளிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

முகநூல் மற்றும் வாட்ஸப் போன்ற சமூக வலைத்தலங்களினால் சமூகத்தில் பரவி வரும் தீமைகள் அதிகரித்து வருகின்றன. இது குறித்த சிறப்புக் கட்டுரை அடுத்த இதழில் வெளியிடப்படும்.

சூ. கோபாலகிருஷ்ணன்,
பதிப்பாசிரியர்

## பொருளடக்கம்

**சிறப்புக் கட்டுரை**
மருத்துவ சேவை நிறுவனங்கள் . . . . 4
**நுகர்வோர் செய்திகள்**
வெயிட்டிங் லிஸ்ட் பயணிகளுக்கு புதிய வசதி . . . . 5
இறங்கும் இடத்தை தவற விடாதிருக்க இரவு நேர ரயிலில் எழுப்பிவிடும் வசதி . . . . 5
இனி சாதி சான்றிதழ்களை பள்ளிகளிலேயே பெறலாம்! - மத்திய அரசு அறிவிப்பு . . . . 6
மாநில நுகர்வோர் சேவை மையத்தினால் தீர்த்து வைகப்பட்ட புகார்கள் . . . 6
நுகர்வோர் குறைதீர் தினம் . . . . 7
கடல் மட்டம் உயர்வினால் 40 மில்லியன் இந்தியர்களுக்கு ஆபத்து: ஐ.நா. அறிக்கை . . . . 8
இந்த புவியின் அடுத்த டைனோசர்களா நாம்...? . . . . 9
உயிருக்கு எமனாகும் பிளாஸ்டிக் பாட்டில் "சிரப்".... . . . . 10
போலி ஓட்டுநர் உரிமம் வைத்திருந்தால் ஒரு வருடம் சிறை மற்றும் 10000 அபராதம்! . . . . 12
பெண்களே... ஸ்கூட்டர் வாங்கப் போகும் முன்னர் இதெல்லாம் கவனிங்க! . . 13
வந்து விட்டது "108 பைக் ஆம்புலன்ஸ்"- வீட்டிற்கே வந்து முதலுதவி! . . . 14
எங்களைக் கேளுங்கள்- வீடு கட்ட அனுமதி பெறுவது எப்படி?. . . . 15
**நுகர்வோர் நலன்**
பிராய்லர் கோழியில் அதிக அளவு ஆன்ட்டிபயாடிக்: சி.எஸ்.இ. எச்சரிக்கை! . 21
முட்டை... முழுமையான தகவல்கள்! . . . . 22
கேழ்வரகின் சத்துக்கள் . . . . 23
மூளையை பாதிக்கும் விஷயங்கள்..! . . . . 23
சிறுநீரக கற்களை கரைக்கும் கற்பூரவல்லி . . . . 24
பீட்சா வில்லன் பரோட்டா எமன்! - உலுக்கும் புற்றுநோய் . . . . 26
**நுகர்வோர் தீர்ப்புகள்**
காப்பீட்டு நிறுவனம் நஷ்ட ஈடு வழங்க உத்தரவு . . . . 28
தபால் அலுவலகத்தில் சேவை குறைபாடு நஷ்ட ஈடு வழங்க நுகர்வோர் கோர்ட் உத்தரவு . . . . 30
ரெயில் பயணம் செய்த பயணியின் பைகளை எலி கடித்து குதறிய வழக்கில் பாதிக்கப்பட்டோருக்கு ரூ. 15 ஆயிரம் நஷ்ட ஈடு . . . . 31
**நுகர்வோர் உலகம்**
வாசகர் கடிதங்கள் . . . . 32
பொது அறிவு வினாக்கள் . . . . 33

# மருத்துவ சேவை நிறுவனங்கள் ஒரு எச்சரிக்கை

உங்கள் எடையைப் பாதியாக்க வேண்டுமா? அணுகுங்கள் எங்கள் சிகிச்சை நிலையத்தை!

சருமம் அழகு பெற வேண்டுமா, நாடுங்கள் எங்களை!!

தேமல் போன்றவற்றை உடனடியாக நீக்க எங்கள் சிகிச்சை பயனளிக்கும்!!

தலைமுடியைப் புதுமுறையில் வளர்க்க சிறந்த முறை எங்களிடம் உள்ளது!!

இது போன்ற விளம்பரங்களைக் கண்டு அவற்றின் உண்மை நிலை தெரியாமல் ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கொட்டி ஏமாந்தவர்கள் பலர்.

அண்மையில் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள ஒரு அழகு நிலையத்தில் ரூ.62,000 ஐ முன்பணமாக செலுத்தி "முடிமாற்று" சிகிச்சைக்கு தன்னை உட்படுத்திக் கொண்ட ஒரு மருத்துவக் கல்லூரி மாணவர் இறந்து போனது, பல அதிர்ச்சி அலைகளை எழுப்பி உள்ளது.

இது போன்ற முடிமாற்று சிகிச்சைகளை சாதாரண மருத்துவர்கள் செய்யக் கூடாது என சட்டம் அறிவுறுத்தியும் நாட்டில் புற்றீசல் போல பல சிகிச்சைக் கூடங்கள் இப்பொழுது மக்களை ஏமாற்றத் தொடங்கியுள்ளன. ஒரு நாளைக்கு 50 முதல் 60 லட்ச ரூபாய் சம்பாதிப்பதாக சொல்லப்படும் இந்நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள் அல்ல. முடி திருத்தும் நிலையத்திற்கு உரிமம் பெற்று, இந்த சிகிச்சை நிலையங்களை நடத்திய இந்த மருத்துவர்கள் சீனாவில் பயிற்சி பெற்றவர்கள் எனக் கூறப்படுகிறது. "மயக்க மருந்து நிபுணரும்" மற்ற மருத்துவர்களும் இருக்கும் இடம் தெரியவில்லை.

சண்டிகரைத் தலைமை இடமாகக் கொண்டு இயங்கும், "முடிமாற்று அறுவை சிகிச்சை நிபுணர்களின்" சங்கம், பல மாதங்களுக்கு முன்னரே இது போன்ற சிகிச்சை முறைகள், தேர்ந்த அறுவை சிகிச்சை நிபுணர்களால் மட்டுமே செய்யப்பட வேண்டும் என்றும், இது போன்ற "புற்றீசல்" மையங்களை நம்பாதீர்கள் என்றும் ஒரு அறிக்கை வெளியிட்டும், இதனை தெரிந்து கொள்ளாமல் சிகிச்சை செய்து கொண்ட "மருத்துவ மாணவர்" போன்றவர்களின் அறியாமையைப் போக்கவே இந்த கட்டுரை.

தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம், அழகு நிலையங்களும் உடனடி சிகிச்சை நிறுவனங்களும் பல்கிப் பெருகி நுகர்வோர்களை விளம்பர உத்திகளால் கவர்ந்து, ஏமாற்றி வருவது அனைவருக்கும் தெரிந்து இருந்தாலும், "விளக்கை நோக்கிப் போகும் விட்டில் பூச்சி" போல பலர் தங்கள் பணத்தை விரயமாக்குவது ஒரு வருந்தத்தக்க விஷயம். நுகர்வோர் நீதிமன்றங்களில் பல வழக்குகள் இருந்தும் எச்சரிக்கையாக இருப்போர் குறைந்து வருவது வேதனை அளிக்கிறது.

Clinical Establishment Act 2010 என்ற மத்திய அரசின் சட்டம் இது போன்ற சிகிச்சை மையங்களை முறைப்படுத்தும். ஆனால் துரதிருஷ்டவசமாக இச்சட்டம் இன்னமும் நம் தமிழ்நாட்டில் அமல்படுத்தப்படவில்லை.

Drugs and magic remedies சட்டத்தின்படி, இது போன்ற விளம்பரங்களை அரசு தடை செய்துள்ளது. ஆனால் அண்மையில் தமிழ்நாடு அரசு பேருந்துகள் சிலவற்றில் விளம்பரங்களைக் கண்டு அதனைப் பற்றி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, முறையான பதில் கிடைக்கவில்லை.

இது போலவே இது போன்ற நிறுவனங்களை யார் முறைப்படுத்துகிறார்கள்? என்று தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு தமிழ்நாடு மருத்துவப் பணிகள் இயக்குனர் அளித்த பதில்: "The directorate is not vested with statutory powers to interfere with private clinical establishment in the state of



Tamilnadu (தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இது போன்ற நிலையங்களின் விஷயங்களில் தலையிடுவதற்கு இவ்வாணையத்திற்கு அதிகாரம் இல்லை)

இவ்வாறு அலட்சியப் போக்குடன் இருந்ததால்தான் இது போன்ற மையங்கள் அவசர கதியில் செயல்பட்டு, நுகர்வோரைக் கேலிக்கு உரியவர்களாக ஆக்குகின்றன.

இந்த சம்பவம் நடந்து முடிந்ததும் தற்சமயம் அரசு, உயர்மட்டக் குழு ஒன்றை ஏற்படுத்தி, தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறியுள்ளது வரவேற்கத்தக்கது.

அதுவரை நுகர்வோர்களாகிய நாம் விழிப்புடன் இருந்து, இது போன்ற சிகிச்சை முறைகளை நம்பாமல், இவை தகுந்த மருத்துவர்களால் நடத்தப்படுகிறதா, இங்கு சிகிச்சை பெற்றவர்களின் பரிந்துரைகள், இங்கு அளிக்கும் சிகிச்சை முறைகள், உலகத் தரம் வாய்ந்தவையா, என்றெல்லாம் சீர் தூக்கிப் பார்த்தப் பின்னரே சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்.

- எம். ஆர். கிருஷ்ணன்

# வெயிட்டிங் லிஸ்ட் பயணிகளுக்கு புதிய வசதி

காத்திருப்போர் பட்டியலில் (வெயிட்டிங் லிஸ்ட்) உள்ள பயணிகளுக்கு வேறு ரயிலில் டிக்கெட் கிடைக்கும் வசதியை ரயில்வே ஏற்படுத்தியுள்ளது. விகல்ப் என்ற இந்த திட்டம் மூலம் முன்பதிவு செய்யும் பயணிகள் ரயிலில் டிக்கெட் கிடைக்காவிட்டால், அவர்களுக்கு வேறு ரயிலில் டிக்கெட் இருந்தால் ஒதுக்கீடு செய்யப்படும்.

இந்த திட்டம் டெல்லியில் இருந்து ஹவுரா, மும்பை, சென்னை, பெங்களூரு மற்றும் செகந்திராபாத் செல்லும் ரயில்களில் செயல்படுத்தப்பட உள்ளது. மெயில், எக்ஸ்பிரஸ், சூப்பர் பாஸ்ட் ரயில்களில் மட்டுமே இந்த வசதி உண்டு. ராஜ்தானி, சதாப்தி, துரந்தோ ரயில்களுக்கு இது பொருந்தாது என ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# இறங்கும் இடத்தை தவற விடாதிருக்க இரவு நேர ரயிலில் எழுப்பிவிடும் வசதி

இந்திய ரயில்வேயில் கட்டணங்கள் மற்றும் பயணிகள் முன் பதிவில் ஜூலை 1ம் தேதி முதல் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட உள்ளன.

**மாற்றங்கள் குறித்த விபரங்கள் :**

- ரத்து செய்யப்படும் தத்கல் டிக்கெட்களுக்கான 50 சதவீதம் தொகை திருப்பி அளிக்கப்படும்.
- தத்கல் டிக்கெட் முன்பதிவிற்கான நேரத்திலும் மாற்றம் செய்யப்பட உள்ளது. இதன்படி ஏசி பெட்டிகளுக்கான தட்கல் முன்பதிவு காலை 10 மணி முதல் 11 மணி வரையிலும், ஸ்லீப்பர் பெட்டிகளுக்கான தட்கல் முன்பதிவு காலை 11 மணி முதல் பகல் 12 மணி வரையிலும் மட்டுமே திறந்திருக்கும்.
- ஜூலை 1 முதல் காத்திருப்போர் பட்டியல் இருக்காது. உறுதி செய்யப்பட்ட டிக்கெட்களும் ஆர்.ஏ.சி., டிக்கெட்களும் மட்டுமே வழங்கப்படும். காத்திருப்போர் பட்டியல் என்ற பிரிவு இனி இருக்காது.
- அடுத்த மாதம் முதல் ராஜ்தானி மற்றும் சதாப்தி ரயில்களில் கூடுதல் பெட்டிகள் சேர்க்கப்பட உள்ளன.
- ராஜ்தானி மற்றும் சதாப்தி ரயில்களில் இனி காகிதம் இல்லா டிக்கெட் வழங்கப்பட உள்ளது. அதாவது மொபைல் போன்கள் மூலம் பெறப்படும் டிக்கெட்கள் மட்டுமே செல்லுபடியாகும்.
- இந்தியன் ரயில்வேயின் அதிகாரப்பூர்வமான இணையதளமான ஐ.ஆர்.சி.டி.சி.,யில் பல்வேறு மொழிகளில் டிக்கெட் முன் பதிவு செய்யும் முறை கொண்டு வரப்பட உள்ளது.
- பிரிமீயம் ரயில்கள் இனி இருக்காது.
- ரத்து செய்யப்படும் சுவிதா ரயில் டிக்கெட்களுக்கான கட்டணத்தில் 50 சதவீதம் தொகை பயணிகளுக்கு திருப்பி வழங்கப்படும்.
- இரவு நேர பயணம் செய்யும் பயணிகளுக்கு தாங்கள் இறங்கும் இடம் வருவதற்கு முன்னதாக ஒலி எழுப்பும் அழைப்பு வசதி கொண்டு வரப்பட உள்ளது.

# இனி சாதி சான்றிதழ்களை பள்ளிகளிலேயே பெறலாம்! – மத்திய அரசு அறிவிப்பு

இனிமேல் மாணவர்கள் ஐந்து அல்லது எட்டாம் வகுப்பு பயிலும்போதே அவர்களுக்கு சாதி மற்றும் பிறப்பிட சான்றிதழ்களை பள்ளிகளிலேயே வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாநில அரசுகளையும் மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

“சாதி சான்றிதழ்கள் மற்றும் பிறப்பிட சான்றிதழ்களை அரசு அலுவலகங்களில் வாங்குவதற்கு பொதுமக்கள் மிகவும் அலைகழிக்கப்படுகிறார்கள். இந்த சான்றிதழ்களை பெற சம்பந்தப்பட்ட அலுவலர்களில் பெரும்பாலானோருக்கு லஞ்சம் கொடுப்பது ஏதோ கட்டணம் செலுத்துவது போன்று சாதாரண நடைமுறை என்பது போன்று ஆகிவிட்டது. இந்த சான்றிதழை, குறிப்பாக சாதி சான்றிதழை பெறுவதில் தாமதம் ஆவதால், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைப்பதிலும் தாமதம் ஆகிறது” என ஏகப்பட்ட புகார்கள் வந்ததை தொடர்ந்தே மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

வழக்கமாக ஒரு மாணவனுக்கு சாதி மற்றும் பிறப்பிட சான்றிதழ்களை மாநில அல்லது யூனியன் பிரதேச அரசுகள்தான் வழங்கும்.

இந்நிலையில் மத்திய அரசு தற்போது அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு அனுப்பி உள்ள அறிவுறுத்தலில், “இனிமேல் பள்ளியின் முதல்வர் அல்லது ஹெட்மாஸ்டர் சம்பந்தப்பட்ட மாணவர்களிடமிருந்து சான்றிதழுக்கு தேவையான ஆவணங்களை பெற்று, அவற்றை சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து வேண்டிய சான்றிதழ்களை கோர வேண்டும். சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளும் அந்த ஆவணங்களை ஆய்வு செய்து, உரிய சான்றிதழ்களை 30 முதல் 60 நாட்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாநில நுகர்வோர் சேவை மையத்தினால் தீர்த்து வைக்கப்பட்ட புகார்கள்

யுக்தி சர்மா என்பவர் Comon E என்ற ஹெட்செட் ஒன்றினை பிளிப்கார்ட் நிறுவனத்தில் ஆர்டர் செய்து வாங்கியுள்ளார். அதற்கு ஒரு வருட வாரண்ட்டியும் இருந்துள்ள நிலையில் திடீரென அந்த ஹெட்செட் பழுதாகியுள்ளது. அவர் அந்நிறுவனத்தினை தொடர்பு கொண்டு பேசிய போது அவர்களிடமிருந்து சரியான பதில் கிடைக்கப்பெறவில்லை. பின்னர் அவர் மாநில நுகர்வோர் சேவை மையத்தினை தொடர்பு கொண்டு புகார் செய்தார். மாநில நுகர்வோர் சேவை மையத்தின் உடனடி நடவடிக்கையின் காரணமாக அவருக்கு புதியதாக ஹெட்செட் மாற்றித்தரப்பட்டது.

சித்தார்த் என்பவர் பஜாஜ் பைக் ஒன்றை வாங்கியுள்ளார். அதற்கு வாரண்டியும் இருந்துள்ள நிலையில் அவரது பைக் பழுதாகியுள்ளது. அவர் பஜாஜ் சேவை நிறுவனத்தினை தொடர்பு கொண்டு சர்வீஸ் செய்து தருமாறு கோரியுள்ளார். ஆனால் அந்நிறுவனத்திடமிருந்து போதிய பதில் கிடைக்கப் பெறவில்லை. பின்னர் அவர் மாநில நுகர்வோர் சேவை மையத்தினை தொடர்பு கொண்டு புகார் செய்தார். மாநில நுகர்வோர் சேவை மையத்தின் உடனடி நடவடிக்கையின் காரணமாக அவருக்கு உடனடியாக சர்வீஸ் செய்து தரப்பட்டது.

டால்ஸ்டன் என்பவர் ரீ டேப்லெட் ஒன்றை வாங்கியுள்ளார். ஆனால் அந்த டேப்லேட் சரிவர இயங்காததால் அவர் அதனை சரி செய்து செய்து தருமாறு அந்நிறுவனத்திடம் புகார் செய்துள்ளார். அந்நிறுவனத்திடமிருந்து போதிய பதில் கிடைக்கப் பெறாததால் அவர் மாநில நுகர்வோர் சேவை மையத்தினை தொடர்பு கொண்டு புகார் செய்தார். மாநில நுகர்வோர் சேவை மையத்தின் உடனடி நடவடிக்கையின் காரணமாக அவருக்கு அந்த டேப்லெட் உடனடியாக சரி செய்து தரப்பட்டது.

# நுகர்வோர்களுக்கு ஓர் நற்செய்தி
# நுகர்வோர் குறைதீர் தினம்

தமிழ்நாடு அரசின் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, கன்ஸ்யூமர்ஸ் அஸோஸியேஷன் ஆ.்.ப் இந்தியாவின் சார்பில் செப்டம்பர் 18 அன்று (18-09-2016) “நுகர்வோர் குறைதீர்” தினம் நடைபெற உள்ளது.

இடம்: தமிழ்நாடு மகளிர் முன்னேற்ற கழக
வளாகத்தில் உள்ள
**அன்னை தெரசா மகளிர் வளாகம்,**
**(வள்ளுவர் கோட்டம் அருகில்) , சென்னை – 34**

அச்சமயம் தமிழ்நாட்டில் உள்ள பல தயாரிப்பு மற்றும் விற்பனை / சேவை நிறுவனங்கள், மற்றும் அரசு சேவை நிறுவனங்கள் சிலவும் (மின் விநியோகம், சாலை போக்குவரத்து, தொலைபேசி, வங்கி, காப்பீடு) கலந்து கொண்டு நுகர்வோர் குறைகளை நேரில் கேட்டு உரிய தீர்வு அளிக்க முன் வந்துள்ளனர். உடனுக்குடன் தீர்வு செய்ய முடியாத புகார்களின் மேல் நடவடிக்கை எடுக்க கன்ஸ்யூமர்ஸ் அஸோஸியேஷன் ஆ.்.ப் இந்தியா உங்களுக்கு துணை புரியும்.

சென்னையை சேர்ந்த நுகர்வோர்கள் மட்டுமல்லாது, புறநகர் பகுதிகளில் வசிக்கும் நுகர்வோர்களும் இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொள்ளலாம்.

அனைவரும் வந்து எங்கள் முயற்சிக்கு வலு சேர்த்து இது போன்ற பல நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்புகள் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பதிவு செய்ய விரும்புவோர் நுகர்வோர் பாதுகாப்புத்துறையில் இயங்கி வரும் மாநில நுகர்வோர் சேவை மையத்தில் உள்ள தொலைபேசியிலோ **(044-28592828)** மற்றும் **cai.india1.org** என்ற மின்னஞ்சல் முகவரியிலும், கன்ஸ்யூமர்ஸ் அஸோஸியஷன் ஆ.்.ப் இந்தியாவின் **044-24494573/74/75** என்ற தொலைபேசி எண்ணிலும் பதிவு செய்து கொள்ளலாம்.

அனுமதி இலவசம்...!!!!! அனுமதி இலவசம்.....!!!!!!!!

**கொழுப்பு வரி**

டென்மார்க் முதலிய மேற்கத்திய நாடுகளில் கொண்டுவரப்பட்ட “கொழுப்புவரி” முதன்முதலாக நமது நாட்டில் கேரளத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது. கொழுப்பு, சர்க்கரை, உப்பு அதிகம் உள்ள திண்படங்களுக்கு தனியே 14.5% வரி விதிக்கப்பட்டுள்ளது. இதனால் இது போன்ற உணவை வாங்குபவர்கள் குறைவார்கள் என்பது அரசின் எண்ணமாகும்.

# கடல் மட்டம் உயர்வினால் 40 மில்லியன் இந்தியர்களுக்கு ஆபத்து: ஐ.நா. அறிக்கை

2050-ம் ஆண்டுக்குள் கடல்மட்டம் உயர்வினால் 40 மில்லியன் இந்தியர்கள் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளனர் என்று ஐ.நா. அறிக்கையில் எச்சரிக்கப்பட்டு உள்ளது.

விரைவான நகரமயமாதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் காரணமாக வருங்காலங்களில் கொல்கத்தா மற்றும் மும்பையில் கடலோர வெள்ளம் அதிகரிக்கும் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. பசிபிக் மற்றும் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் பருவநிலை மாற்றம் காரணமாக மோசமான பாதிப்பு இருக்கும் என்று உலகளாவிய சுற்றுச்சூழல் கண்ணோட்டம் பிராந்திய கணிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

2050-ம் ஆண்டுக்குள் கடல்மட்டம் உயர்வதினால் உலகளவில் அதிகமாக பாதிக்கப்பட கூடிய 10 நாடுகளில் 7 நாடுகள் ஆசிய பசிபிக் பிராந்தியத்திலே உள்ளது என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்த பட்டியலில் இந்தியா முதலிடம் பிடித்து உள்ளது. கடல்மட்ட உயர்வினால் இந்தியாவில் சுமார் 40 மில்லியன் மக்கள் பாதிப்புக்கு உள்ளாவார்கள் என்று கணிக்கப்பட்டு உள்ளது. இதற்கு அடுத்த படியாக வங்காள தேசத்தில் 25 மில்லியன் மக்களும், சீனாவில் 20 மில்லியன் மக்களும் பிலிப்பைன்ஸ் நாட்டில் 15 மில்லியன் மக்களும் ஆபத்தை எதிர்க்கொண்டு உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

பெரும்பாலான கடற்கரை பகுதியில் நகர்புற குடியேறுதல் வளர்ந்து வருகிறது. கடற்கரை நகரமயமாதல் இயற்கையான கடற்கரை அமைப்பை பாதிப்புக்கு உள்ளாக்குகிறது. தீவிர காலநிலை நிகழ்வுகளை எதிர்கொள்வதில் இயற்கையான கடற்கரை அமைப்பு தோல்வி அடைகிறது. சீனா, இந்தியா, தாய்லாந்து உள்ளிட்ட நாடுகள் எதிர்காலத்தில் அதிகமான பாதிப்பை எதிர்க்கொண்டு உள்ளது. இந்தியாவில் மும்பை மற்றும் கொல்கத்தா ஆகிய நகரங்கள் இடம்பெற்று உள்ளன. சீனாவில் குவாங்செள மற்றும் ஷாங்காய், வங்காளதேசத்தில் டாக்கா, மியான்மரில் யங்கூன், தாய்லாந்தில் பாங்காக், வியட்நாமில் ஹோ சி மின் சிட்டி மற்றும் ஹய் போங் நகரங்கள் இடம்பெற்று உள்ளது. இந்நகரங்களில் பெரிய அளவிலான மக்கள் தொகை வெளிப்பாடு 2070-ல் கடலோர வெள்ளத்திற்கு வழிவகை செய்யும் என்றும் எச்சரிக்கப்பட்டு உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்று சூழல் சட்டமன்றம் அடுத்த வாரம் நைரோபியில் நடைபெற உள்ளநிலையில் இந்த அறிக்கையானது வெளியிடப்பட்டு உள்ளது, பசிபிக் மற்றும் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் பருவநிலை மாற்றம் காரணமாக மோசமான பாதிப்பு இருக்கும் என்றும் குறிப்பிடப்பட்டு உள்ளது.



# இந்த புவியின் அடுத்த டைனோசர்களா நாம்...?

“மனிதன், வரவிருப்பதை அறிந்து தடுக்கும் திறமையை இழந்து விட்டான். அவன் இறுதியில் உலகையே அழித்துவிடுவான்” என்றார் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவ ஞானி ஆல்பர்ட் ஷ்வைசர். உலகம் அழிகிறது என்றால் நேரடியாக உலகம் அழிவதில்லை. அது உவமயம். உலகம் அழிவது என்றால், உலகில் உள்ள உயிரினங்கள் அழிவது, மனிதன் அழிவது. அதுதான் இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. நாம் நம் மோசமான கண்டுபிடிப்புகள், வாழ்வு முறையால் புவியை நாசமாக்கிவிட்டோம். தன் சொந்த வீட்டை அசுத்தப்படுத்தி விட்டோம். இப்போது அதன் துர்நாற்றத்தில் சிக்கி தவிக்கிறோம்.

ஆம். டெல்லியில் ஆண்டொன்றுக்கு சராசரியாக காற்று மாசுபாட்டால் பத்தாயிரம் முதல் முப்பதாயிரம் மரணங்கள் நிகழ்வதாக அறிவியல் மற்றும் சுற்றுச் சூழலுக்கான மையம் சொல்கிறது. 2014 ம் ஆண்டு, டெல்லியை உலகின் மிக மோசமான சூழலியல் கேட்டிற்கு உள்ளான நகரம் என்று உலக சுகாதார மையம் குறிப்பிட்டது இந்த தருணத்தில் இயல்பாக முக்கியத்துவம் பெறுகிறது.

**டெல்லியில் மட்டும் இந்த நிலை அல்ல:**

டெல்லியில் மட்டும் இந்த நிலை அல்ல, மொத்த இந்தியாவின் நிலையும் இதுதான். இந்தியாவில் மரணத்திற்கான பத்து காரணங்களில், காற்று மாசுபாடு ஐந்தாவது காரணியாக இருப்பதாக அந்த மையத்தின் ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. இந்திய அளவில் சென்ற ஆண்டு, ஆறு லட்சத்திற்கும் மேலான மரணங்கள் காற்று மாசுபாட்டால் நிகழ்ந்து இருக்கிறது.

மோசமான சூழல் கேடுகள் பருவநிலை மாற்றத்திற்கும் இட்டு சென்றுள்ளது. பருவநிலை மாற்றம் டெங்கு, மலேரியா உள்ளிட்ட பல நோய்களுக்கும் காரணமாக இருப்பதாக அந்த ஆய்வு சொல்கிறது. முன்பு மலேரியா பரவுவதற்கு சாத்தியமான காலங்களாக ஆறு மாதங்கள் இருந்தது, இப்போது பன்னிரெண்டு மாதங்களும் மலேரியா பரவும் காலமாக இருக்கிறது, என்கிறது அந்த அறிக்கை.

2015 ல் மட்டும் 600 பேர் அனல்காற்றால் ஆந்திரா மற்றும் ஒடிசாவில் இறந்து இருக்கிறார்கள். வெப்பம் தாங்காமல் அகமதாபாத்தில் இருந்த மருத்துவமனைகள், மேல் தளத்தில் இருந்த மகப்பேறு பிரிவை கீழ் தளத்திற்கு மாற்றி உள்ளன.

தமிழகத்தின் நிலையும் இதற்கு சற்றும் குறைந்ததல்ல, தகித்துக் கொண்டிருக்கிறது.

**கொசுவும் வளர்ச்சியின் சின்னம் தான்:**

சரி. இதற்கு தீர்வென்ன? மலேரியாவும், டெங்குவும் இந்தளவிற்கு ஏன் பரவுகிறது என்ற கேள்வியில்தான். இதற்கான தீர்வும் ஒளிந்து இருக்கிறது. ஆம். கொசுவும், ஈ யும் இந்த பத்தாண்டுகளில் இந்த புவியில் புதிதாக ஜனித்தவை அல்ல. அது பல நூற்றாண்டுகளாக இந்த புவியில் இருக்கத்தான் செய்கிறது.

முன்பெல்லாம் கொசு, நீர் நிலைகளில் முட்டை இடும், அந்த முட்டையை தலைபிரட்டை உண்ணும். ஆனால், நாம் போற்றி வளர்த்த வளர்ச்சி, நீர் நிலைகளை கழிவுநீர் கால்வாயாக மாறிவிட்டது, தலைபிரட்டையை காணாமல் போகச் செய்துவிட்டது. கொசுக்கள் வீரியம் கொண்டுவிட்டன. கொசுவும் வளர்ச்சியின் சின்னமாக மாறிவிட்டது. நமக்கு வளர்ச்சி வேண்டும் தான்; ஆனால் அது அனைத்தையும் ஒருங்கிணைத்ததாக இருக்க வேண்டும். நீர் நிலைகளை, காற்றை மாசுப்படுத்தாததாக இருக்க வேண்டும். நம் பொருளாதார கொள்கைகளை அதற்கு தகுந்தாற்போல் வடிவமைத்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால், டைனோசருக்கு ஏற்பட்ட நிலைதான் நாளை நம் சந்ததி சந்திக்கும்.

ஆம், இந்த புவியில் பொருத்தமானது மட்டுமே வாழும்.



# உயிருக்கு எமனாகும் பிளாஸ்டிக் பாட்டில் "சிரப்"...

மருத்துவத்துறைதான் மானிட வர்க்கம் இன்று தழைக்க காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. விதவிதமான நோய்களும் வகை வகையான மருந்துகளும் இந்த நூற்றாண்டில் பெருகியிருக்கிற சூழலில், மனித வர்க்கத்தின் ஒரே நம்பிக்கை மருத்துவத்துறைதான்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை யாராக இருந்தாலும் உடல் நலம் கெட்டால் உடனடியாக மருத்துவரிடம் சென்று நிற்கிறோம். அவர் எழுதிக் கொடுக்கும் மருந்தை வாங்கி சாப்பிடுகிறோம். குழந்தைகளுக்கு பெரும்பாலும் எழுதித்தரப்படுபவை பாட்டிலில் விற்கப்படும் "சிரப்"புகள். முன்பெல்லாம் கண்ணாடி பாட்டில்களில் வந்த இந்த சிரப்புகள், இப்போதெல்லாம் பாதுகாப்பு காரணங்களுக்காக பிளாஸ்டிக் பாட்டில்களில் அடைக்கப்பட்டுதான் கடைகளுக்கு விற்பனைக்கு வருகின்றன.

இப்போது இதுதான் சர்ச்சைக்குள்ளாகியிருக்கிறது. அதாவது "பிளாஸ்டிக் பாட்டிலில் உள்ள மருந்தில் உள்ள வேதிப்பொருள், பிளாஸ்டிக்குடன் வினைபுரிந்து நச்சுப் பொருளாக மாறுகிறது அல்லது விஷமாகிறது" என அதிர்ச்சி தருகிறது மத்திய சுகாதாரத் துறை. மத்திய அரசு கேட்டுக் கொண்டதன் பேரில் "ஆல் இந்தியா இன்ஸ்டிடியூட் ஆ.ஃப் ஹைஜின் அண்ட் பப்ளிக் ஹெல்த்" நடத்திய ஆய்வில்தான் இந்த அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

மருத்துவத்துறையில் பிரபலமாக விளங்கும் இருமல் மருந்து தயாரிக்கும் நிறுவனங்களான பெனட்ரில் மற்றும் அலெக்ஸ் இந்த சர்ச்சையில் சிக்கியுள்ளன. அதாவது இந்நிறுவனங்களின் இருமல் மருந்துகளில் தாது மற்றும் குரோமியம், கேட்மியம் போன்றவை அதிகமாக கலந்திருக்கிறது. இந்த மருந்துகளை அறை வெப்பநிலையில் வைக்கும் போது, மருந்தில் இருக்கும் தாது பொருட்கள் மற்றும் குரோமியம், கேட்மியத்துடன் பிளாஸ்டிக் வினை புரிந்து மருந்தில் நச்சு தன்மையை உருவாக்குகிறது.

பிரபலமான ஐந்து நிறுவனங்களின் மருந்துகளில் இது போன்ற பிரச்னை இருப்பதாக "ஆல் இந்தியா இன்ஸ்டிடியூட் ஆ.ஃப் ஹைஜின் அண்ட் பப்ளிக் ஹெல்த்" அமைப்பு தெரிவித்துள்ளது. அதாவது Pfizer's Mucaine Gel, Hemfer Syrup, Alex cough Syrup, Benadryl cough Syrup, PolybionMerck Multivitamin Syrup ஆகிய ஐந்து மருந்துகளில் பிரச்னை உள்ளது. பெனட்ரில் "ஜான்சன் அண்டு ஜான்சன்" நிறுவனத்தின் தயாரிப்பு ஆகும். அலெக்ஸ் இருமல் மருந்தை "க்ளென் மார்க்" நிறுவனம் இந்தியாவில் விற்பனை செய்து வருகிறது. மேற்கூறியுள்ள மல்டி வைட்டமின் சிரப்பை ஜெர்மன் நிறுவனம் தயாரிக்கிறது.

இது குறித்து சம்பந்தப்பட்ட மருந்து தயாரிப்பு நிறுவனங்களிடம் கேட்டால், விதவிதமான பதிலை தெரிவிக்கின்றனர்.

"மருந்து பொருட்களை மட்டும்தான் நாங்கள் தயாரிக்கிறோம். மருந்துகளை அடைக்க பயன்படுத்தப்படும் பாட்டில்களை வெளியில் இருந்துதான் வாங்குகிறோம். எ.ஃப் டி ஏ (Food and Drug Administration) பரிசோதனை செய்து அனுமதித்த பொருட்கள் மூலம் மருந்து பாட்டில்களை தயாரிக்கும் நிறுவனத்திடம் இருந்துதான் பாட்டில்களை வாங்குகிறோம்" என்கிறது ஆல்கெம் லேப்ஸ் நிறுவனம். இப்படி ஒவ்வொரு நிறுவனமும் ஒவ்வொரு விதமான பதில்களை தெரிவித்துள்ளன.

இந்த ஐந்து மருந்துகளை தயாரிக்கும் நிறுவனங்கள், இந்தியாவில் அதிகமான சந்தை மதிப்பை வைத்துள்ளன. அதாவது பெனட்ரில் ரூ.50 கோடிக்கும், அலெக்ஸ் ரூ. 35 கோடிக்கும் கடந்த வருடம் மருந்துகளை இந்தியாவில் விற்பனை செய்துள்ளது. மேலும் ஃபைசர் நிறுவனத்தின் ஜெல் மட்டும் 50 சதவிகித சந்தை மதிப்பை வைத்துள்ளது. இதன் ஒரு ஆண்டு விற்பனை ரூ.100 கோடியாக உள்ளது.

மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம், மருந்துகளை அடைப்பதற்கு பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பாட்டில்களின் அளவை குறைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

அதாவது குழந்தைகளின் மருந்துகள், முதியோருக்கான மருந்துகள், கருவுற்றிருக்கும் பெண்கள் பயன்படுத்தும் மருந்துகள், மாதவிடாய் பிரச்னை காரணமாக சாப்பிடும் மருந்துகள் உள்ளிட்ட மருந்துகளை அடைப்பதற்கு பிளாஸ்டிக் பாட்டில்களை பயன்படுத்துவதை குறைக்குமாறு அறிவுறுத்தி உள்ளது. மேலும் பிளாஸ்டிக் பாட்டில் பயன்பாட்டில் பாதுகாப்பான அளவைக் கேட்டு ஆய்வு மையத்திற்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

மத்திய அரசு, ஆய்வு மையத்திடம் பாதுகாப்பான அளவை கேட்பதை விட, பிளாஸ்டிக் பயன்பாட்டை அறவே தவிர்க்கவோ அல்லது குறைப்பதற்கான வழிமுறைகளையோ தேட வேண்டும். அதுதான் சரியான முடிவாக இருக்க முடியும்.

உயிர் கொடுக்கும் மருத்துவத்துறை உயிரெடுக்கும் துறையாக மாறிவிடக்கூடாது!

- நன்றி விகடன்

# போலி ஓட்டுநர் உரிமம் வைத்திருந்தால் ஒரு வருடம் சிறை மற்றும் ரூ. 10000 அபராதம்!

நாட்டில் மூன்றில் ஒரு ஓட்டுநர் உரிமம் போலியானதாக உள்ளதால் மோட்டார் வாகனச்சட்டத்தில் கடுமையான மாற்றங்களை கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியாவில் 3 ல் ஒருவர் போலியான ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பதாக ஒரு புள்ளி விவரம் தெரிவிக்கிறது. இதனடிப்படையில் சாலை போக்குவரத்தை மீறுபவர்கள், போலி ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பவர்களுக்கு கடும் தண்டனை விதிக்க ராஜஸ்தான் போக்குவரத்துத் துறை அமைச்சர் யூனுஸ்கான் தலைமையில் அமைச்சர்கள் குழு அமைக்கப்பட்டது. இக்குழு பல்வேறு பரிந்துரைகளை மத்திய அரசுக்கு அளித்துள்ளது. அதன்படி விரைவில் மத்திய அரசு புது மசோதாவை கொண்டு வர திட்டமிட்டுள்ளது.

தமிழகத்தில் கோவை உள்ளிட்ட இடங்களில் போலியான லைசென்ஸ் தயாரித்த கும்பல் கைதான சம்பவங்கள் நடைபெற்றன. போலியான ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பவர்களுக்கு மோட்டார் வாகனச் சட்டத்தில் தற்போது அதிகபட்சமாக 3 மாத சிறைத் தண்டனை, ரூ.500 அபராதம் விதிக்கப்படுகிறது. தற்போது ஓராண்டு சிறை தண்டனை, ரூ.10,000 வரை அபராதம் விதிக்கும்



வகையில் மாற்றங்கள் கொண்டு வரப்படுகிறது. சிறுவர்கள் வாகனங்களை ஓட்டி படுகாயம், உயிரிழப்பு ஏற்பட்டால், அந்த வாகனத்தின் உரிமையாளருக்கு கடும் தண்டனை விதிக்கப்படும். அதன் படி 3 ஆண்டு சிறை தண்டனை, ரூ.20,000 அபராதம் விதிக்கப்படும். அத்துடன் வாகன பதிவும் ரத்து செய்யப்படும்.

இதனை மத்திய போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார். தனியார் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு நேற்று பேட்டி அளித்த அவர், “ஓட்டுநர் உரிமங்களில் 30% போலி என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது. போலி ஆவணங்களை வைத்துக் கொண்டு 5 கோடி பேர் வாகனங்களை ஓட்டுகின்றனர். இதைத் தடுக்க வேண்டியது மிகவும் அவசியம். எனவே, ஓட்டுநர் உரிமம் பெற கணினி மூலம் சோதனை நடத்தும் திட்டத்தை ஆன்லைனில் தொடங்க உள்ளோம்.

அரசியல்வாதிகள், அதிகாரிகள், பிரபலங்கள் என எவருக்கும் ஓட்டுநர் உரிமம் பெறும் சோதனையில் இருந்து விதிவிலக்கு அளிக்க முடியாது. இந்த திட்டம் மிகமிக வெளிப்படையாக இருக்கும்.

ஆண்டுதோறும் ஒன்றரை லட்சம் பேர் சாலை விபத்துகளில் இறக்கின்றனர். இதை தடுக்க மத்திய அரசு கொண்டு வரவுள்ள புதிய சட்டம், ஓட்டுநர் உரிமம் பெறுவது முதல் போக்குவரத்து நடைமுறைகள் அனைத்திலும் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வாக இருக்கும்.

மேலும், 5000 ஓட்டுநர் மையங்கள் அமைக்கவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் இந்த மசோதா நிறைவேற்றப்படும். சாலை போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு தொடர்பான மசோதா, இந்திய சாலைகளை மிகவும் பாதுகாப்பானதாக மாற்ற உதவும்.

ராஜஸ்தான் போக்குவரத்துத் துறை அமைச்சர் தலைமையிலான அமைச்சர்கள் குழு, தனது முதற்கட்ட பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது. அதில் போக்குவரத்து விதிகளை மீறுபவர்களுக்கு கடும் தண்டனை, அபராதம் விதிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் இறுதி அறிக்கையை அமைச்சர்கள் குழு சமர்ப்பிக்க உள்ளது. அதன்பிறகு நாடாளுமன்றத்தில் இந்த மசோதா நிறைவேற்றப்படும்” என தெரிவித்தார்.

- நன்றி விகடன்

# பெண்களே... ஸ்கூட்டர் வாங்கப் போகும் முன்னர் இதெல்லாம் கவனிங்க!

பெண்களுக்கு மிகவும் பிடித்தமான விஷயங்களில் ஸ்கூட்டர் ஓட்டுவதும் ஒன்றாக உள்ளதால், எப்படியாவது அப்பா அல்லது கணவரிடம் பேசி எப்படியும் ஸ்கூட்டர் வாங்க சம்மதிக்க வெச்சுடுவாங்க. அப்புறம் டி.வி விளம்பரம் பார்த்து ஷோரூமுக்கும் கூட்டிட்டுப் போயிடுவாங்க...!

பின்னர், 'என்னது... விளம்பரத்துல சொன்னதைவிட விலை அதிகமா இருக்கே?'... 'இவ்வளவு மைலேஜ் இதுல கிடைக்குமா?' என்று சலித்தபடியோ, வியந்தபடியோ, ஆசைப்பட்ட ஸ்கூட்டரை விட்டுவிட்டு, கிடைத்த ஸ்கூட்டரை புக் செய்துவிட்டு வீடு திரும்புவதுதான் மிடில்கிளாஸ் பெண்களுக்கு நடக்கிறது.

பெண்கள் ஸ்கூட்டர் புக் செய்யப் போகும்போது, என்னென்ன விஷயங்களை கவனிக்க வேண்டும்... ஷோரூம் டீலர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை பார்க்கலாமா...?

### உறுதியாய் இருங்கள்!

ஸ்கூட்டர் வாங்குறதுனா சும்மாவா? முதலில் ஸ்கூட்டரைத் தேர்வு செய்வதற்கு முன் பல முறை யோசியுங்கள். தேர்ந்தெடுத்த பின் ஒரு தடவைகூட யோசிக்காதீர்கள். "இந்த ஸ்கூட்டர்தான் வாங்க வேண்டும்" என்று ஷோரூமுக்கு நீங்கள் சென்றால், அங்கே நடப்பது வேறொன்றாக இருக்கும். 'மேடம், இந்த ஸ்கூட்டர் பார்த்தீங்கன்னா மெட்டல் பாடி... ஆனா இதுல ஃபைபர் பாடி! மைலேஜ் அதிகமா கிடைக்கும். ஆக்ஸசரீஸ்லாம் ஃப்ரீயா பண்ணித் தர்றோம்' என்று விற்பனையாளர்கள் உங்கள் மனதை மாற்றுவார்கள். காரணம், அவர்கள் சொல்லும் ஸ்கூட்டர்களின் விற்பனை டல் அடிப்பதாக இருக்கலாம்; கமிஷன் அடிப்படையில் அவர்களுக்குக் கவனிப்பும் நிகழும். எனவே, உஷார்

### ஷோருமில் சொல்லப்படும் மைலேஜ் உண்மையா?

நீங்கள் நினைப்பதுபோல், ஸ்கூட்டர்களில் பெட்ரோலைத் தளும்பத் தளும்ப நிரப்பி மைலேஜ் செக் செய்யமாட்டார்கள். ட்ரெட்மில் போன்றதொரு அமைப்பில் பைக்குகளை நிறுத்தி, பின் சக்கரத்தை மட்டும் எக்கானமி மோடில் சுழல வைத்து, கொஞ்சூண்டு மில்லி லிட்டர் பெட்ரோல் ஊற்றித்தான் மைலேஜ் செக் செய்யப்படும். இதற்கு "டைனோ டெஸ்ட்டிங்" என்று பெயர். இதில் யாரும் பிரேக் பிடிக்கமாட்டார்கள், சிக்னல் இருக்காது, மாடு குறுக்கே வராது. ஏற்கெனவே அந்த ஸ்கூட்டர் பயன்படுத்தும் சிலரிடம் ஸ்கூட்டர் பற்றிய விவரங்கள், பிரேக்ஸ் நல்லாருக்கா... மெயின்டெனன்ஸ் எப்படி... மைலேஜ் எவ்வளவு வருது..? என்பது போன்ற தகவல்களை கேட்டு தெரிந்து எடுத்துக் கொள்வதுதான் நல்லது.

### லோனில் வாங்கலாமா... மொத்தத் தொகையா?

ஒரு ஸ்கூட்டர் 65,000 ரூபாய் என்றால், லோன் மூலம் நீங்கள் புக் செய்தீர்கள் என்றால், தவணைக் காலம், வட்டி விகிதத்தைப் பொறுத்து 10,000 முதல் 20,000 வரை நீங்கள் தொகை அதிகமாகச் செலுத்த வேண்டியிருக்கும். இது ஒவ்வொரு லோன் கம்பெனிக்கும் வேறுபடும். முன்பு லோனில் வாங்கும்போது ஆர்.சி புக், வங்கியில்தான் தேங்கி இருக்கும். தவணைக் காலம் முடிந்தபிறகுதான் உங்கள் ஆர்.சி கைக்கு வரும்.. இப்போது அந்த நடைமுறை ஒரு சில நிறுவனங்களில் கைவிடப்பட்டாலும், ரெடி கேஷில் வாங்குவது சிறந்தது. அப்படியும் இல்லை என்றால், யாராவது நண்பர்களிடம் கடனை வாங்கிவிட்டு, மாதா மாதம் அவர்களுக்கு அதை திருப்பி செலுத்துவதும் பெஸ்ட் சாய்ஸ். குறைந்த மாத காலத் தவணையில் லோன் மூலம் வாங்கலாம். அப்படியும் சிக்கல் என்றால், ஸ்கூட்டர் வாங்க அரசாங்கம் தருகிற 50% மானியத்தை யூஸ் பண்ணிக்கலாமே

### எவையெல்லாம் ஆக்சஸரீஸ்?

'55,000 ஆன்ரோடு விலைக்கு' என்றுதான் விளம்பரம் செய்வார்கள். ஆனால், ஷோரூமுக்குப் போனால், லேடீஸ் கார்டு, ஃபுட் ரெஸ்ட், ஆக்சஸரீஸ், கொடிநாள், அ∴பிவிட் என்று எக்ஸ்ட்ராவாக குறைந்தது 4,000 ரூபாய்க்காவது பில் பல் இளிக்கும். உங்கள் பட்ஜெட், துண்டு போட்டு உங்களைத் தாண்டிவிடும். எனவே, எப்போதுமே ஆன்ரோடு விலையில் இருந்து 3,000 ரூபாய் அதிகமாகவே எடுத்துக்கொண்டு போவது மனச்சுமையைக் குறைக்கும். 'என்னங்க, சைடு ஸ்டாண்டெல்லாம் ஆக்சஸரீஸ்லயா வரும்?' என்று ஷோரூம் விற்பனையாளர்களிடம் சண்டை போடும் பெண்களும் உண்டு. எனவே, என்னென்ன ஆக்சஸரீஸ், எக்ஸ்ட்ரா விலையில் வரும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

**(விலை: உத்தேசமாக)**

1. **சைடு ஸ்டாண்ட்: 800**
2. **ஃப்ளோர் மேட்: 300**

3. ஹேண்ட் கிரிப்: 100

4. இண்டிகேட்டர் பஸ்ஸர் பீப்: 90

5. லேடீஸ் ஹுக்: 150

6. ஸ்டோரேஜ் பாக்ஸ்: 1,000 (சில ஸ்கூட்டர்களில் இது டீஃபால்ட் ஆகவே வந்துவிடும். ஆக்டிவா போன்ற ஸ்கூட்டர்களில் இதற்குத் தனி சார்ஜ்)

7. பம்பர் : 2,100

8. டெஃப்லான் கோட்டிங்: 400

9. AMC: 800



இதில் டெ.ஃப்லான் கோட்டிங், யுஆஊ ஏரியாவில் கண்ணை மூடிக் கொண்டு 'நோ' சொல்லிவிடுங்கள். டெ.ஃப்லான் கோட்டிங் என்பது வாகனப் பூச்சு சம்பந்தப்பட்ட விஷயம். இதை இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை பண்ணினாலே போதும். அதுவும் .ஃபைபர் பாடி கொண்ட ஸ்கூட்டர்களுக்கு இது அவசியமில்லை. ஏஎம்சி என்பது "அனுவல் மெயின்டனன்ஸ் கான்ட்ராக்ட்". இதில் இரண்டு சர்வீஸ்கள் எக்ஸ்ட்ராவாகக் கிடைக்கும். அவ்வளவே!

**ரிஜிஸ்ட்ரேஷன், நீங்களே செய்வது நல்லது!**

வெயிட்டிங் பீரியடைத் தாண்டி, ஸ்கூட்டர் நம் கைக்கு வருவதற்கு மேலும் சில நாட்கள் ஆகலாம். காரணம், ரெஜிஸ்ட்ரேஷன். ஆனால், உண்மையில் ரெஜிஸ்ட்ரேஷன் ஒரு மணி நேரத்தில் முடியக்கூடிய விஷயம். 'ஆர்டிஓ இன்ஸ்பெக்டர் லீவு மேடம்... 2 நாள் கழிச்சு வாங்க!' என்பார்கள். மேலும், அவர்கள் நம் ஸ்கூட்டரைப் பயன்படுத்துவதைப் பார்த்தால், கண்ல தண்ணி வெச்சிடும்! நீங்களே ரெஜிஸ்ட்ரேஷன் செய்யும்போது, லேசாக பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கும். ஸ்கூட்டர் டெலிவரி எடுக்கும்போது, பிரேக்ஸ் லூஸாக இருக்கிறதா... ஹெட்லைட் எரிகிறதா... ஸ்க்ராட்சஸ் இருக்கின்றனவா? இன்ஷூரன்ஸ் நகல், ஆர்.சி, இன்வாய்ஸ் பில், சர்வீஸ் மேனுவல் என எல்லாவற்றையும் மறக்காமல் செக் செய்யுங்கள்!

- நன்றி விகடன்

# வந்து விட்டது "108 பைக் ஆம்புலன்ஸ்" – வீட்டிற்கே வந்து முதலுதவி!

108' அவசரகால ஆம்புலன்ஸ் திட்டத்திற்கு, 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அவரசகால முதலுதவிக்கான 41 இருசக்கர வாகனங்களின் சேவையை, மாண்புமிகு தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், "ஒவ்வொரு ஆண்டும் சாலை விபத்துகளில் விலை மதிப்பற்ற மனித உயிர் இறப்புகள் ஏற்படுகின்றன. இதனால் பாதிக்கப்படும் குடும்பங்கள், மன உளைச்சலுக்கு ஆளாவதோடு வருமானம் ஈட்டும் நபரை இழந்து பொருளாதார நெருக்கடிக்கும் ஆளாகின்றனர். உயிர் இழப்பை தடுக்கவும், விலை மதிப்பற்ற மனித உயிர்களைக் காப்பாற்றவும் தமிழக அரசு, அரசு மருத்துவமனைகளில் விபத்து மற்றும் தலைக்காய சிகிச்சை மையங்களை ஏற்படுத்தி வருவதோடு, '108' அவசரகால ஆம்புலன்ஸ் திட்டத்தில் செயல்பட்டு வரும் ஆம்புலன்ஸ்களின் எண்ணிக்கையை கடந்த 5 ஆண்டுகளில் 385-லிருந்து 755-ஆக உயர்த்தியுள்ளது.

இதுமட்டுமின்றி, 66 பச்சிளம் குழந்தைகளுக்கான சிறப்பு அவசரகால ஊர்திகள், 78 மலையோரங்கள் மற்றும் மணல் பாங்கான பகுதிகளில் இயங்கக்கூடிய சிறிய ரக அவசரகால ஊர்திகள், சென்னை புறநகர் பகுதியில் 2 அவசரகால சிகிச்சை '108' அவசரகால சேவையை மேலும் செம்மைப்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கில், அவசரகால முதலுதவிக்காக 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 41 இருசக்கர வாகனங்களின் சேவையை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட அவசரகால

முதலுதவிக்கான 41 இருசக்கர வாகனங்களில், 31 இருசக்கர வாகனங்கள் மோட்டார் சைக்கிள் வடிவிலும், 10 இருசக்கர வாகனங்கள் ஸ்கூட்டர் வடிவிலும் அமைக்கப்பட்டுள்ளன. ஆடவர் மட்டுமின்றி, அவசர கால பெண் மருத்துவ உதவியாளரும் இயக்கும் வண்ணம் இவ்வாகனங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலேயே முதன் முறையாக பெண் மருத்துவ உதவியாளர்களால் இயக்கப்படும் அவசரகால முதலுதவிக்கான ஸ்கூட்டர் வடிவிலான இருசக்கர வாகனங்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

விபத்தில் பாதிக்கப்பட்டவருக்கு, முதல் 10 நிமிடங்கள் பிளாட்டினம் நிமிடங்கள் (Platinum 10 minutes)என்று அழைக்கப்படுகிறது. இந்த முதல் 10 நிமிடங்களில் பாதிப்பின் தன்மையை கண்டறிந்து, பாதிக்கப்பட்ட பகுதியை அசையாமல் செய்து (Immobilisation) உயிர் மீட்பு (Resuscitation), உயிர் வாயு வழங்குவது (Oxygen), இரத்தப்போக்கை கட்டுப்படுத்துவது (Bleeding control) போன்ற முதலுதவிகள் பாதிப்பின் தன்மையை குறைத்து, உயிர் காக்கும் வாய்ப்பை அதிகரிக்கும். விபத்து பகுதிகளுக்கு '108' அவசரகால ஊர்திகள் செல்வதற்கு முன்பு, பாதிப்புக்குள்ளானவருக்கு உடனடியாக தரமான முதலுதவி கிடைக்க இந்த இருசக்கர முதலுதவி வாகனங்கள் வழிவகை செய்யும். இதனால் விபத்தில் பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவ உதவி கிடைப்பதற்கான கால அளவு (Reponse Time) மேலும் குறையும்.

இந்த இருசக்கர முதலுதவி வாகனத்தில், கையில் எடுத்து செல்லக்கூடிய உயிர் வாயு சிலிண்டர் (Portable oxygen Cylinder), நாடித்துடிப்பை கண்டறியும் கருவி (Pulsoxymeter), இரத்த அழுத்தத்தை அறியும் கருவி (BP apparatus), இரத்தத்தில் சர்க்கரை அளவை அறியும் கருவி (Glucometer), உடல் சூட்டை அறியும் கருவி (Digital Thermometer) போன்ற உயிர் காக்கும் கருவிகளும் தேவையான மருந்துகளும் வைக்கப்பட்டுள்ளன.

இந்த இருசக்கர வாகனத்தை பயிற்சி பெற்ற அவசரகால மருத்துவ உதவியாளர் ஓட்டுவார். அவசர ஒலி எழுப்பும் ஒலிபெருக்கி தன்மையுடன் கூடிய வண்ணத்தில் இவ்வாகனங்கள் சிறப்புற வடிவமைக்கப்பட்டுள்ளன. அவசரகால அழைப்பு, '108' அவசர கட்டுப்பாடு அறைக்கு வந்தவுடன், பாதிப்பின் தன்மைக்கேற்ப இந்த இருசக்கர வாகனம் அனுப்பி வைக்கப்பட்டு, பாதிப்பின் தன்மையை ஆய்வு செய்து முதலுதவி வழங்கப்படும். பாதிப்பின் தன்மை அதிகமாகவும், மருத்துவமனையில் உடனடி சிகிச்சை பெற வேண்டிய அவசியமும் இருப்பின், '108' அவசரகால ஆம்புலன்ஸ் மூலம் பாதிக்கப்பட்டவர் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுவார்.

இந்த அவசரகால இருசக்கர வாகனம், முதல் கட்டமாக சென்னை மாநகரத்தில் முக்கிய சந்திப்புகள், குறுகிய மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டு, பகல் பொழுதில் போக்குவரத்து அதிகம் இருக்கக்கூடிய இடங்களில் இயக்கப்படும். இவற்றின் பயன்பாட்டைப் பொறுத்து, இந்தத் திட்டம் மற்ற நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இந்த சிறப்பு சேவை மூலம், மேலும் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்படும்" என்று கூறப்பட்டுள்ளது.




# எங்களைக் கேளுங்கள்

## வீடு கட்ட அனுமதி பெறுவது எப்படி?

புதிதாக வீடு கட்ட வேண்டுமென்றாலும் ஏற்கனவே கட்டப்பட்ட வீட்டில் புதிய மாற்றங்கள் செய்ய வேண்டி இருந்தாலும் அதற்கு திட்ட அனுமதி பெற வேண்டும். இதனை சென்னை மாநகர எல்லைக்குள் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடமும் மற்ற இடங்களில் நகர திட்ட இயக்கம் வரைபடம் இல்லாமல் அனுமதி பெற முடியாது. இதனை Layout என்று கூறுவார்கள். இது அரசு நிர்ணயித்துள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும்.

சென்னையில் எழும்பூரில் உள்ள சி.எம்.டி.ஏ அலுவலகத்திலும், மற்ற பகுதிகளில் District Town Planning அலுவலகத்திலும் அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம். மலைப் பகுதிகளில் அனுமதி பெற Hill area conservation authority யிடம்அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்.

நிலம் அல்லது மனையின் உரிமையாளர் அல்லது குத்தகைதாரர் மட்டுமே அனுமதி கேட்டு விண்ணப்பிக்க முடியும்.

அனுமதி கோரும் விண்ணப்பங்கள் ஏ,பி,சி என மூன்று வகைகளில் இருக்கும்.

“ஏ” என்பது வீடு கட்டும் மனைப் பிரிவிற்கான விண்ணப்பம். இதனை வழங்கும் போது மனைக்குரிய அனைத்து ஆவணங்களையும் இணைக்க வேண்டும் (Approved Layout) அங்கீகார மனையாக இருந்தால் சிக்கல் எதுவும் இருக்காது

வீட்டைக் கட்டவும், விரிவாக்கம் செய்யவும் கோரும் விண்ணப்பம் படிவம்”பி”யில் இருக்கும். கட்டிடத்தின் வரைபடம் அவசியம் இணைக்கப்பட வேண்டும். வீட்டைச் சுற்றி 100மீட்டர் அளவில் அமைந்துள்ள சுற்றுச்சூழல் விவரங்கள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பெரிய அளவில் கட்டப்படும் (3 அடுக்குக்கு மேல்) அடுக்குமாடி, மற்றும் தொகுப்பு வீடுகளுக்கு விண்ணப்ப படிவம் “சி”யில் இருக்க வேண்டும்.

இதற்கு சி.எம்.டி.ஏ அமைப்பின் உறுப்பினர் செயலரின் அங்கீகாரம் தேவை.

விண்ணப்பங்கள், மேலே குறிப்பிட்ட அலுவலகங்களில் கிடைக்கும், விண்ணப்பத்துடன் உறுதி மொழிப்படிவமும் இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்களை சி.எம்.டி.ஏயின் இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பெரும்பாலும் விண்ணப்பம் “பி”தான் பயன்படுத்தப்படுகிறது. இந்த விண்ணப்பத்துடன் வரைபடம், உரிமையாளர் மற்றும் கட்டிட பொறியாளரின் கையெழுத்து ஆகியவை கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.



கட்டுமானப் பணி நடக்கும் போது விதிமுறைப்படி ஒழுங்காக கட்டப்படுகிறதா என்பதை அலுவலர்கள் கண்காணிப்பார்கள்.

வீடு கட்டி முடிந்ததும் Completion certificate வாங்க வேண்டும். இது இருந்தால் தான் மின்சாரத்துறை, குடிநீர் / வடிகால் துறையின் அனுமதி பெற முடியும். அடுக்குமாடி கட்டிடமானால் கட்டுபவர்கள் இதனை வாங்கி நுகர்வோருக்குத் தர வேண்டும்.

(FSI, கட்டிடத்தின் தரம், கட்டிட வரைபடம், உயரம் ஆகியவை இதில் குறிப்படப்பட்டு இருக்கும்) இந்த சான்றிதழ் பிற்காலத்தில் சட்ட சிக்கல்கள் உருவாகாமல் இருக்க நுகர்வோருக்குப் பயன்படும்.

**நிலம் வாங்கும் போது கவனிக்க வேண்டியவை**

- கடந்த 30 வருடங்களுக்கான தாய்ப்பத்திரங்களைப் படித்து பாருங்கள்
- நிலம் விற்பவர் பெயரில் பத்திரம் உள்ளதா என கவனியுங்கள்
- நிலவரி, நடப்பு ஆண்டு வரைக் கட்டப்பட்டுள்ளதா என கவனியுங்கள்.
- பதிவு அலுவலகத்தில் உள்ள குறைடன Measurement bookல் உள்ள விவரங்களுடன் நீங்கள் வாங்கிய நில விவரங்களை ஒப்பிட்டுப் பாருங்கள்.
- Layout அங்கீகாரம் பெற்றுள்ளதா என சோதியுங்கள்.
- “பவர் ஆ.்.ப் அட்டர்ணி” ஒப்பந்ததாரர், விற்பவராக இருந்தால் இந்த ஒப்பந்த்தை முழுமையாகப் படித்து விற்பவரின் உரிமையை சந்தேகத்துக்கு இடமில்லாமல் சோதியுங்கள்.
- அண்மையில் பெற்ற வில்லங்க சான்றிதழ் கேட்டு வாங்குங்கள்
- அடுக்குமாடி கட்டிடங்களானால் முறைப்படி அனுமதி பெற்றுள்ளதா என சரிப் பார்த்துக் கொள்ளுங்கள்
- நிலத்தின் மேல் ஏற்கனவே பெற்ற கடன் முழுக்க கட்டப்பட்டு விட்டதா என உறுதி செய்து கொள்ளுங்கள்.
- ஏற்கனவே கட்டிய வீட்டை வாங்குவதாக இருந்தால் சொத்து வரி, தண்ணீர் வரி ஆகியவை கட்டப்பட்டதற்கான சான்றுகளையும் மின் கட்டணம் கடைசி வரை செலுத்தப்பட்டுள்ளதா என்றும் கவனியுங்கள்.




உலக நுகர்வோர் உரிமை தின விழாவின் போது எடுத்த புகைப்படம். அப்பொழுது தேனி மாவட்ட நுகர்வோருக்கு விருது வழங்கப்பட்டது.



மாண்புமிகு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள் முன்னிலையில் நடைப்பெற்ற பொது விநியோகத்திட்ட கலந்தாய்வுக் கூட்டம்



11.07.16அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு. உணவுப்பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள், தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக்கழகம், பொதுவிநியோகத்திட்ட கிடங்கு ஆகியவற்றில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது உணவுத்துறை முதன்மை செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குநர் திரு.கா.பாலசந்திரன் இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் முதன்மை செயலர்/ஆணையாளர் அவர்கள் உரையாடிய போது எடுத்த புகைப்படம்.



29.06.2016 அன்று உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் நடைப்பெற்ற தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடன் பேருந்துகள் பற்றிய கலாந்தாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம்



நுகர்வோர் அமைப்புகளுடன் முதன்மை செயலாளர் / ஆணையாளர் ,உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை நடத்திய கலந்துரையாடல்



கோயம்புத்தூர் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்ட மாணவ மாணவியர்கள்



கோயம்புத்தூர் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் நடைபெற்ற விழா

# பிராய்லர் கோழியில் அதிக அளவு ஆன்ட்டிபயாடிக்: சி.எஸ்.இ. எச்சரிக்கை!

பிராய்லர் கோழி இறைச்சியில் அளவுக்கு அதிகமான ஆன்டிபயாடிக் எனப்படும் நோய் எதிர்ப்பு மருந்துகள் கலந்திருப்பதாக மத்திய அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மையம் (சிஎஸ்இ) எச்சரித்துள்ளது.

கோழி வளர்ப்பு உரிமையாளர்கள், கறிக்கோழி குறுகிய காலங்களில் வேகமாக வளர்வதற்காக, பாக்டீரியாக்களை தடுப்பதற்காக செலுத்தப்படும் ஆன்ட்டிபயாடிக் மருந்துகளை அதிகம் பயன்படுத்துவதாகவும், இந்த மருந்துகள் காரணமே இல்லாமல் கோழியின் எடையை அதிகரிக்கவும், வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்காகவும் மட்டுமே பயன்படுத்தப்படுவதாகவும், இதனால் இந்த மருந்துகள் அந்த கோழியின் இறைச்சியை சாப்பிடும் மனிதர்களின் உடலுக்குள்ளும் புகுந்துவிடுவதாகவும், இதனால் நோயாளிகளுக்கு ஆன்டிபயாடிக் மருந்தை கொடுக்கும்போது அதனை வேலை செய்யவிடாமல் தடுக்கும் பாக்டீரியாக்களின் ஆதிக்கம் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் பல்வேறு மருத்துவ நிபுணர்கள் விடுத்த எச்சரிக்கையை தொடர்ந்து, இது தொடர்பாக மத்திய அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மையம் (Centre for Science and Environment -CSE) ஆய்வு மேற்கொண்டது.

இந்த ஆய்வின்போது எடுத்துக்கொள்ளப்பட்ட 70 கோழிக்கறி மாதிரிகளில், 40 சதவீத மாதிரிகளில் அளவுக்கு அதிகமான ஆன்டிபயாடிக் மருந்து இருப்பது தெரியவந்ததாக சிஎஸ்இ தெரிவித்துள்ளது.

டெல்லியிலிருந்து 66 மாதிரிகளும், நொய்டாவிலிருந்து 12, குர்கானிலிருந்து 8 மற்றும் ஃபரிதாபாத் மற்றும் காஸியாபாத் ஆகிய இடங்களில் இருந்து தலா 8 மாதிரிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு சிஎஸ்இ ஆய்வுக்கூடத்தில் பரிசோதிக்கப்பட்டது. இந்த பரிசோதனைக்கு கோழிகளின் கிட்னி, தசை உள்ளிட்ட பாகங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டது.

பொதுவாக கோழிவளர்ப்பில் 6 ஆன்ட்டிபயாடிக் மருந்துகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. டெட்ராசைக்ளின், என்ரோபிளாக்சசின், சிப்ரோபிளாக்சசின், நியோமைசின் உள்ளிட்டவை ஆகியவை அளவுக்கு அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 5 வகை மருந்துகள் அனைத்து கோழிக்கறி மாதிரிகளிலும் காணப்பட்டன. கிலோவுக்கு 3.37-131.75 மைக்ரோகிராம் ஆன்ட்டி பயாடிக் மருந்துகளின் படிவுகள் அந்த கறியில் இருப்பது தெரியவந்தது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குர்கான் பகுதியில் இருந்து வாங்கப்பட்ட கோழி இறைச்சி மாதிரியில் ஒன்றுக்கும் மேற்பட்ட, அதாவது ஆக்சிடெட்ராசைக்ளின், டாக்சிசைக்ளின், என்ரோபிளாக்சசின் மருந்துகளின் படிவுகள் அதிக அளவில் காணப்பட்டுள்ளது. இதனால், கோழிக்கறி சாப்பிடுபவர்களுக்கு, ஆன்ட்டி பயாடிக் மருந்துகளையும் தடுக்கும் பாக்டீரியாக்களின் ஆதிக்கம் ஏற்படும் அபாயம் இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

கறிக்கோழிக்கு அதிகம் ஆன்ட்டிபயாடிக் செலுத்தப்படுவதன் காரணமாக அதனை சாப்பிடும் மனிதர்களுக்கும் ஆன்ட்டி பயாடிக்கினால் குணப்படுத்த முடியக்கூடிய நோய்களையும் குணப்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. ஆன்ட்டி பயாடிக் பயன்பாடுகள் மனித, மருத்துவப் பயன்பாடுகளையும் மீறிச் சென்றுள்ளது.

சிப்ரோபிளாக்சசின் என்ற ஆன்ட்டிபயாடிக் மூக்கு முதல் பாதம் வரையிலான அனைத்து நோய்களையும் எதிர்க்கும் மருந்தாகும். இதன்பலனை மனித உடல் இழக்கும்போது கிருமித் தொற்று நோய்களுக்கு சிகிச்சை அளிப்பது பெரும் சவாலாக மாறிவிடும். இந்தியாவில் இது அதிகரித்திருப்பதாக எச்சரித்துள்ள சி.எஸ்.இ. ஆய்வாளர்கள், இறைச்சி உற்பத்தித் தொழிற்துறையில் அதிகமாக ஆன்ட்டி பயாடிக் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க அரசு கடும் சட்டங்களையும் கண்காணிப்பு முறையையும் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர்.



# முட்டை... முழுமையான தகவல்கள்!

மலிவான விலையில், ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஓர் உணவு முட்டை. ஃபோலேட், பாஸ்பரஸ், செலினியம், ஜிங்க், வைட்டமின் ஏ, டி, இ, கே, பி5, பி12, பி2, பி6 மற்றும் கால்சியம் என இதில் இருக்கும் சத்துப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. ஒருவர், சரியான உணவு பட்டியலை தயார் செய்யும்போது, அதில் முட்டையும் இருக்கும் பட்சத்தில் "டயட் லிஸ்ட்" முழுமை பெறும்.

1. முட்டையை வாங்கும் முன் சுத்தமாக, வெள்ளையாக உள்ளதா எனப் பார்த்து வாங்க வேண்டும். பழைய முட்டையாக இருந்தால், மைல்டான பழுப்பு நிறத்தில் தெரியும். முட்டையை வாங்கியதும் ப்ரிட்ஜில் வைத்துப் பாதுகாக்கலாம். ஆனால், 3 வாரத்துக்கு மேல் வைக்கக் கூடாது.

2. முட்டையை ப்ரிட்ஜில் வைப்பதே நல்லது. அதுவும் முட்டை வைப்பதற்குரிய இடத்தில் மட்டுமே வைக்க வேண்டும். ஏனெனில், அந்த இடத்தில்தான் முட்டைக்குத் தேவையான தட்பவெப்ப நிலை கிடைக்கும். முட்டை கெடாமலும் பாதுகாக்கும்.

3. முட்டையைக் கையில் எடுக்கும் போது அதிகக் கவனம் தேவை. கை நழுவி கீழே விழுந்தால் அதில் இருக்கும் நுண்கிருமிகளும், துர்நாற்றமும் வீட்டின் சூழலையே மாற்றிவிடும். கை, நகங்களில் பட்டால் கூடப் பரவத் தொடங்கும்.



4. ஒரு பவுலில் முட்டையின் அளவை விட இரண்டு மடங்கு தண்ணீரை நிரப்பி அதில் முட்டைகளைப் போடுங்கள். ஃப்ரெஷ்ஷான முட்டை எனில் நீரில் ப்ளாட்டாகச் சாய்ந்து இருக்கும். பழைய முட்டையாக இருந்தால் முட்டையின் கூர்மையான நுனி பகுதி பாத்திரத்தில் பட்டு நிற்கும் நிலையில் காணப்படும். எந்த முட்டையாவது மிதந்தால் அதைச் சாப்பிடாமல் தவிர்ப்பது நல்லது.

5. ஒரு முட்டையைக் கையில் எடுத்து காது அருகில் வையுங்கள். மென்மையாக அதனை "ஷேக்" பண்ணுங்கள். பிறகு, 10 நொடிகள் காது அருகிலே முட்டையை வைத்திருங்கள். சத்தம் எதுவுமே வரவில்லை எனில் அது நல்ல முட்டை. எதாவது சின்னச் சத்தம் வந்தால் அவற்றைச் சமைக்காமல் விட்டுவிடுவது நல்லது.

6. முட்டையைத் தோசை தவாவில் உடைத்து ஊற்றும் போது மஞ்சள் கரு சிறிது மேலெழும்பி இருந்தால் அது ப்ரெஷ். அதே மஞ்சள் கரு கொஞ்சம் தளர்வாகக் கீழே அமுங்கி இருந்தால் அது கொஞ்சம் பழைய முட்டை எனக் கண்டுபிடித்து விடலாம்.

7. முட்டையில் சால்மோநெல்லா (Salmonella) என்ற கிருமியும், மற்ற கிருமிகளும் இருக்கும் என்பதால் பச்சையாகச் சாப்பிடவே கூடாது. சமைக்கப்பட்ட முட்டையைச் சாப்பிடுவதே நல்லது.

8. சமைக்கப்பட்ட முட்டையை 2 மணி நேரத்துக்குள் சாப்பிட்டு விட வேண்டும். முட்டையை எந்த முறையில் வேண்டுமானாலும் சமைத்துச் சாப்பிடலாம். ஆனால், மிகச் சிறந்த தேர்வாக இருப்பது வேக வைக்கப்பட்ட முட்டையே.

9. குளிர்ச்சித் தன்மை இல்லாத சூழலில் முட்டையைப் பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டிய சூழல் இருந்தால் வாங்கிய 3 நாட்களுக்குள் சமைத்து விட வேண்டும். மூன்று நாட்களுக்கு மேல் வெளியில் வைத்திருக்கும் முட்டையைச் சாப்பிடாமல் தவிர்ப்பது நல்லது.

# கேழ்வரகின் சத்துக்கள்

இந்திய மக்களின் உணவுப் பட்டியலில் நீங்காத இடம் பெற்றவை கேழ்வரகு உணவு வகைகள். உடல் எடையை குறைப்பதற்கும், உணவு செரிமானத்திற்கும் ஏற்றது கேழ்வரகு உணவுகள். மருத்துவ மகத்துவம் மிக்க அதன் சத்துக்களை பார்க்கலாம். கேழ்வரகின் தாயகம் எத்தியோப்பியா.'போசீயியா'தாவர குடும்பத்தை சேர்ந்தது. இதன் அறிவியல் பெயர் 'எல்லுசீன் குரோகனோ'.

வறண்ட நிலங்களிலும், மித வெப்ப பகுதிகளிலும் நன்கு வளரக் கூடியவை. இந்தியாவில் 4000 ஆண்டுகளுக்கு மேலாக கேழ்வரகு பயிரிடப்படுகிறது. இதில் கர்நாடகமும், தமிழ்நாடும் அதிக அளவில் உற்பத்தி செய்கின்றன. ஆப்பிரிக்கா, மடகாஸ்கர், இலங்கை, மலேசியா, சீனா மற்றும் ஜப்பான் போன்ற உலக நாடுகளிலும் கேழ்வரகு பயிராகிறது.

கேழ்வரகில் உடலுக்கு சக்தியளிக்கக் கூடிய'கார்போஹைட்ரேட்'பொருட்கள் அதிகமாக காணப்படுகின்றன. புரதம் (7.7சதவீதம்) மற்றும் நார்ச்சத்து (3.6சதவீதம்) பொருட்களும் குறிப்பிட்ட அளவில் உள்ளன. 100 கிராம் கேழ்வரகில் 336 கலோரிகள் ஆற்றல் உடலுக்கு கிடைக்கிறது.

மிகக்குறைந்த கொழுப்புப் பொருட்கள் கொண்டது கேழ்வரகு. 100 கிராம் கேழ்வரகில் 1.3 சதவீதமே கொழுப்புச்சத்து காணப்படுகிறது. உடலுக்கு அத்தியாவசிய தாதுப் பொருட்களான கால்சியம், இரும்பு அதீத அளவில் உள்ளன. நியாசின், தயாமின், ரீபோபிளேவின் போன்ற பி குழும வைட்டமின்களும் கணிசமாக காணப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் வளர்ச்சிதை மாற்றம், சுரப்பிகளின் செயல்பாடுகள் ஊக்குவிப்பு என பல்வேறு உடற் செயல்களில் பங்கு வகிக்கின்றன.

கேழ்வரகில் வலைன், ஐசோலியோசின், டிரையோனைன், லியோசின், மீத்தை யோனைன் போன்ற அமினோ அமிலங்கள் உள்ளன. இதில் வலைன் அமினோ அமிலம் திசுக்களின் சீரான செயல்பாட்டிற்கு உதவி தசைகளை வலுவூட்டுகிறது. உணவு செரிமானத்திற்கும் உதவுகிறது.

ஐசோலியோசின் அமிலமானது ரத்த அணுக்கள் உருவாக்கத்திலும், ரத்தத்தில் சர்க்கரையின் அளவை சீராக வைத்துக் கொள்ளவும் உதவுகின்றன. டிரையோனைன் அமிலங்கள் உடலில் புரதப் பொருட்களை வளப்படுத்தப் படுகின்றன. மேலும் கல்லீரலில் கெட்ட கொழுப்புகளை சேர விடாமல் பாதுகாக்கின்றன.

# மூளையை பாதிக்கும் விஷயங்கள்..!

காலையில் உணவு உண்ணாமல் இருப்பவர்களுக்கு இரத்தத்தில் குறைவான அளவே சர்க்கரை இருக்கும். இது மூளைக்குத் தேவையான சக்தியையும் தேவையான ஊட்டச்சத்துக்களையும் கொடுக்காமல் மூளை அழிவுக்குக் காரணமாகும்.

அதிகளவாகச் சாப்பிடுவதனால் மூளையில் இருக்கும் இரத்த நாளங்கள் இறுகக் காரணமாகி, மூளையின் சக்தி குறைவுக்குக் காரணமாகும்.

புகை பிடிப்பதனால் மூளை சுருங்கவும், அல்சைமர்ஸ் வியாதி வருவதற்கும் காரணமாகிறது. நிறைய இனிப்புச் சாப்பிடுவதனால் புரோட்டின் நமது உடலில் சேர்வதைத் தடுக்கிறது. இதுவும் மூளை வளர்ச்சிக்கு பாதிப்பாகிறது.

மாசு நிறைந்த காற்றை சுவாசிப்பதனால் நமக்குத் தேவையான ஆக்சிஜனை பெறுவதிலிருந்து தடை செய்கிறது. மூளைக்கு ஆக்சிஜன் செல்லா விட்டால் மூளை பாதிப்படையும்.

நல்ல உறக்கம் இல்லாமையால் மூளைக்கு ஓய்வு இல்லாமல் போகின்றது. தேவையான அளவு தூ ங்காமலிருப்பது நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்தும்.

தலையை மூடிக்கொண்டு நித்திரை செய்வதனால் போர்வைக்குள் கரியமிலவாயு அதிகரிக்க வைக்கிறது. இது நீங்கள் சுவாசிக்கும் ஆக்சிஜனை குறைக்கிறது.

உடல் நோயுற்ற காலத்தில் மிக அதிகமாக மூளைக்கு வேலை கொடுப்பதும், தீவிரமாகப் படிப்பதும் மூளையைப் பாதிக்கும். உடல் சரியாக ஆன பிற்பாடு மூளைக்கு வேலை கொடுப்பதே சிறந்தது.

மூளைக்கு வேலை கொடுக்கும் சிந்தனைகளை மேற்கொள்ளாமல் இருப்பது மூளையை அதிகமாக உபயோகப்படுத்தும் சிந்தனைகளை மேற்கொள்வதால், மூளையில் புதுப்புது இணைப்புகள் உருவாகின்றன. அதனால் மூளை வலிமையான உறுப்பாக ஆகிறது. அறிவுப்பூர்வமான உரையாடல்களை மேற்கொள்வது மூளையின் வலிமையை அதிகரிக்கிறது.

# சிறுநீரக கற்களை கரைக்கும் கற்பூரவல்லி

அழகுக்காக வளர்க்கப்படும் செடி கற்பூரவல்லி. நறுமணத்தை தரக்கூடிய இதற்கு ஓமவல்லி என்ற பெயரும் உண்டு. தொட்டால் மணம் தரக்கூடியது. சிறுநீரக கற்களை கரைக்கும் தன்மை கொண்டது. சளியை கரைத்து வெளிதள்ள கூடியது. உள் உறுப்புகளை தூண்ட கூடியது. காக்கா வலிப்புக்கு மருந்தாகிறது. பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. ஒரு கிளையை மட்டும் எடுத்து தொட்டியில் நட்டு வைத்தால் அது நன்றாக வளரும்.

கற்பூரவல்லியை பயன்படுத்தி சைனஸ், நெஞ்சக சளியை போக்கும் மருந்து தயாரிக்கலாம். கற்பூரவல்லி இலை சாறு எடுத்துக்கொள்ளவும். பெரியவர்கள் என்றால் 2 ஸ்பூன், குழந்தைகளுக்கு ஒரு ஸ்பூன் எடுக்கவும். இதனுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்த்து குடித்துவர சளி குணமாகும். குழந்தைகளுக்கு மாந்தத்தை போக்கும். இருமல் இல்லாமல் போகும். பசியை தூண்ட கூடியது. மூக்கடைப்பு, தலைவலிக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம்.

ஒரு ஸ்பூன் நல்லெண்ணெய், அரை ஸ்பூன் கற்பூரவல்லி இலை பசை, சிறிது சர்க்கரை சேர்த்து லேசாக சூடு செய்தபின் மூக்கு, நெற்றியில் பத்தாக போடும் போது மூக்கடைப்பு, தலைவலி சரியாகும். தலைபாரம், சைனஸ் குணமாகும். இதயம், உணவுப்பாதை, சிறுநீரக பாதைக்கு பலம் கொடுக்கும். அக்கி, அம்மை கொப்புளங்களுக்கான மருந்து தயாரிக்கலாம். கற்பூரவல்லி இலை சாறு அல்லது பசையை கொப்புளங்களுக்கு மேல் பூசினால் அவைகள் சரியாகும்.

கற்பூரவல்லி இலையை பயன்படுத்தி வெள்ளைபோக்கு, சிறுநீரக கற்களை கரைக்கும் மருந்து தயாரிக்கலாம். ஒருவேளைக்கான தேனீர் தயாரிக்க 3 இலைகளை எடுத்து துண்டுகளாக்கி போடவும். இதனுடன் ஒரு ஸ்பூன் தனியா, சிறிது பனங்கற்கண்டு சேர்க்கவும். ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி எடுத்துக் கொண்டால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். சிறுநீர் பையில் தங்கியிருக்கும் கற்களை கரைத்து வெளித்தள்ளும்.

வெள்ளைப்படுதல் சரியாகும். கற்பூரவல்லியை பயன்படுத்தி குளிர் காய்ச்சலை போக்கும் மருந்து தயாரிக்கலாம். 3 கற்பூரவல்லி இலைகள், அரை ஸ்பூன் சீரகத்துடன் சிறிது பனங்கற்கண்டு சேர்க்கவும். ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். வடிகட்டி காலை, மாலை குடித்துவர குளிர் காய்ச்சல், மலேரியா காய்ச்சல் குணமாகும். கல்லீரல், மண்ணீரல் பலப்படுவதுடன் அவைகளின் செயல்பாடுகள் சீராகும். கற்பூரவல்லி வீட்டில் இருக்க வேண்டிய உன்னதமான மூலிகை.

இதன் மணம் கொசுக்கள், பூச்சிகளை விரட்ட கூடியது. கடலை மாவுடன் கற்பூரவல்லியை பஜ்ஜியாக செய்து குழந்தைகளுக்கு கொடுக்கும்போது இருமல், சளி, காய்ச்சல் குணமாகும்.கற்பூரவல்லி செரிமானத்தை தூண்டக் கூடியது. வலியை குறைக்கும். புண்களை ஆற்றும். மருக்களை கரைக்கும் தன்மை கொண்டது. ஆண்கள் ஓரிரு இலைகளை சாப்பிடுவதால் கற்கள் கரைந்து போகும். கற்பூரவல்லி சாற்றை மேலே பூசுவதால் அக்கி கொப்புளங்கள் வற்றும்.



# பீட்சா வில்லன் பரோட்டா எமன்! – உலுக்கும் புற்றுநோய்.

சமீபத்தில் இந்திய அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் கழகம் நடத்திய ஆய்வு ஒன்றில் பல்வேறு முன்னணி நிறுவனங்களின் பீட்ஸா, பர்கர், பிரபலமான நிறுவனத்தின் பிஸ்கட் போன்றவற்றை சாப்பிட்டால் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருப்பது நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

பொட்டாசியம் புரோமெட், பொட்டாசியம் அயொடேட் ஆகிய இரண்டு வேதிப் பொருள்களை பல நிறுவனங்கள் பீட்சா, பர்கர், பிஸ்கட் பயன்படுத்தும் மாவுகளில் சேர்க்கின்றன. இந்த வேதிப்பொருள்கள் புற்றுநோயை ஏற்படுத்தும் வாய்ப்பு கொண்டவை என்பதால் பல நாடுகள் இதற்கு தடை விதித்திருக்கின்றன. இன்னமும், இந்த வேதிப் பொருட்களால் கண்டிப்பாக புற்றுநோய் வரும் என உலகம் முழுவதும் நடத்தப்படும் எல்லா ஆய்வுகளிலும் உறுதி செய்யப்படவில்லை. எனினும் மக்களின் நலன் கருதி பல நாடுகள் தடைபோட்டிருக்கின்றன. ஆனால் இந்தியாவில் இவற்றுக்கு தடை இல்லை.

இதனால் உடனடியாக இந்த இரண்டு வேதிப்பொருட்களையும் உணவில் பயன்படுத்துவதற்கு இந்திய உணவு பாதுகாப்பு கழகம் தடை விதிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருக்கிறது, இந்திய அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம்.

இந்த இரண்டு வேதிப்பொருட்கள் பிரச்னை ஒரு பக்கம் இருக்க, மைதா தயாரிக்க பயன்படுத்தப்படும் அலெக்சான் என்ற வேதிப்பொருள் புற்றுநோயை ஏற்படுத்தவல்லது என மருத்துவ அறிஞர்கள் சந்தேகம் எழுப்புகின்றனர். எனவே எப்படி பார்த்தாலும் மைதா ஒரு சர்ச்சைக்குரிய பொருளாகவே இருக்கிறது. நாம் விரும்பி சாப்பிடும் அத்தனை உணவுகளிலும் மைதாவே நிறைந்திருக்கிறது. கேக், ஸ்வீட்ஸ், சமோசா, பீட்சா, பர்கர், பிரட், நூடுல்ஸ், பரோட்டா என இப்படி எங்கெங்கும் மைதா சாம்ராஜ்யம் விரிந்து வருகிறது.

மாறிவரும் வாழ்க்கை முறை காரணமாக உடற்பருமன், சர்க்கரை நோய், புற்றுநோய் என பல்வேறு நோய்கள் வருவதற்கு அடிப்படை காரணம் தவறான உணவுப் பழக்கமே என்கிறார்கள் மருத்துவர்கள்.

“நான் சிகரெட்டே பிடிச்சதில்லை, தண்ணி பழக்கமும் இல்லை. ஆனா எனக்கு எப்படி புற்றுநோய் வந்ததுன்னு தெரியலை” என பலர் புலம்புவதை பார்த்திருப்போம், கேட்டிருப்போம். புற்றுநோய்க்கு பின்னால் இருக்கும் முக்கியமான வில்லன் மோசமான உணவுகள் தான். பாக்கெட்டில் அடைக்கப்பட்ட, பதப்படுத்தப்பட்ட, அதிகம் சந்தைப்படுத்தப்படுகின்ற பெரும்பாலான உணவுகள் உடலுக்கு கெடுதியை விளைவிக்க கூடியவைதான்.

பீட்சா, பர்கர், நூடுல்ஸ் என மேற்கத்திய உணவுகள் மட்டுமல்ல; நம்மூர் பரோட்டாவும் கெடுதிதான். மைதாவில் இருப்பது வெறும் மாவுச்சத்து மட்டும்தான். நாம் அளவுக்கு அதிகமாக மாவுச்சத்தை சாப்பிட ஆரம்பிக்கும்போது, அது நமது உடலில் கொழுப்பாக மாறி சேகரித்து வைக்கப்படும். அடிக்கடி இந்த மோசமான மாவுச்சத்துள்ள உணவுகளை சாப்பிடும்போது உடல் பருமன் எளிதில் வந்துவிடும். உடல் பருமன் வந்துவிட்டால் அழையா விருந்தாளியாக ரத்தக் கொதிப்பும், சர்க்கரை நோயும் பின்னாலேயே வரிசை கட்டி வந்து நிற்கும். நீண்ட நாள் உடல்பருமன் பிரச்னை இருந்தால் மெல்ல மெல்ல புற்று செல்கள் வளர ஆரம்பித்து புற்று நோய் வருவதற்கான வாய்ப்புகளையும் அதிகமாக்கும். நாம் அன்றாடம் செய்யும் சிறுசிறு தவறுகள் நமது வாழ்கையை புரட்டிப் போட்டு விடுகின்றன.

“இந்திய உணவு பாதுகாப்புக் கழகம்” பரிந்துரைக்கும் உணவுகளைத்தான் மக்கள் சாப்பிடுகிறார்கள். ஆனால் அதே கழகம் பின்னொரு நாளில் இந்த உணவு கெடுதி என்கிறது. பிறகு மீண்டும் அதே நிறுவனத்தின் உணவை சந்தைப்படுத்த மீண்டும் அனுமதி கொடுக்கிறது. உணவுச் சந்தை மிக மிகப் பெரியது. உணவு சந்தைகளின் லாபத்துக்கு பலியாவது அப்பாவி பொது மக்கள்தான்.



அமெரிக்காவில் இருக்கும் எப்.டி.ஐ அவ்வப்போது பெரும் நிறுவனங்களாக இருந்தாலும் உணவு கட்டுப்பாட்டை மீறினால் கடுமையான அபராதம், தண்டனைகளை விதிக்கிறது. ஆனால் இந்தியாவில் நிலை தலைகீழ். அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட பல பொருட்கள் இங்கே சந்தையில் சக்கைப் போடு போடுகின்றன. அதற்கு எளிய உதாரணம் ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவன தயாரிப்புகள்.

சந்தையில் இருக்கும் பல உணவுகள் கெடுதி விளைவிப்பவை என்பது மக்களுக்கு தெரிந்தாலும் மீண்டும் மீண்டும் மக்கள் ஏன் அதே உணவை நாடுவதற்கு அதன் சுவைதான் காரணம். மீண்டும் மீண்டும் சாப்பிடத்தூண்டும், சுண்டியிழுக்கும் சுவைக்கு பின்னால் பல ரகசியங்கள் ஒளிந்திருக்கின்றன. சுவைக்காக சேர்க்கப்படும் பதப்படுத்திகள், சுவையூட்டிகள் போன்றவை உயிருக்கே உலை வைப்பவை.

மது, சிகரெட் போலவே இது போன்ற சுவைகளுக்கும் அடிமையாகிவிட்டால் அதிலிருந்து மீள்வது கடினம். மதுவும், சிகரெட்டும் ஒழுக்கம் சார்ந்த பிரச்னையாக நம் சமூகத்தில் கருதப்படுவதால் நோய்களுக்கு பலர் அதை மட்டும் சுட்டிக்காட்டுகிறார்கள். சிகரெட் பழக்கமும், புகைப்பழக்கமும் இல்லாதவர்களுக்கும் பல நோய்கள் வருவதற்கு என்ன காரணம் என யாரும் எண்ணி பார்ப்பதில்லை.

“எந்த ஒரு உணவுப்பொருளிலும் அதன் நிறத்தை கூட்ட, நிறத்தை வெளுக்க வேதிப்பொருள் சேர்க்கப்படும் போது அதன் தன்மை மாறிவிடுகிறது, அதில் இருக்கும் ஊட்டச்சத்துக்கள் அழிந்துவிடும்”

“ஒரு மனிதனுக்கு அத்தனை சத்துக்களுமே மிகவும் முக்கியமானவை. எது குறைந்தாலும், அதிகரித்தாலும் ஆபத்துதான். பொதுவாக எல்லா உணவுகளிலும் மாவுச்சத்து என்பது குறிப்பிட்ட அளவு இருக்கிறது. மாவுச்சத்து, நார்ச்சத்து, புரதச்சத்து, கொழுப்பு சத்து, வைட்டமின்கள், தாது உப்புகள் என எல்லாமே நமக்கு தேவை. இதில் ஏதாவதொன்றை மட்டுமே சாப்பிடுவேன், மற்றதை தவிர்ப்பேன் என முடிவெடுத்தால் உடல் பாதிக்கப்படுவதை யாராலும் தடுக்கமுடியாது.



மைதா வகை உணவுகள் அனைத்திலும் ஊட்டச்சத்துக்கள் அறவே கிடையாது, இதில் அளவுக்கு அதிகமான மாவுச்சத்து நிறைந்திருக்கும். மாவுச்சத்து நிறைந்த உணவுகள் பொதுவாக அதிகமாக சாப்பிடத் தூண்டும், எளிதில் வயிறு நிறைந்த திருப்தியை தராது. ஃபாஸ்ட் புட், பீட்சா, பர்கர் போன்ற உணவுகள் வெறும் குப்பை உணவுகள். இந்த உணவுகளால் ஒரு சதவிகிதம் கூட நல்லது கிடையாது. உணவு குறித்து கடந்த 30 ஆண்டுகளாக சரியான புரிதல் நம்மிடம் இல்லை. நமது முன்னோர் உணவுப் பழக்கங்கள் எப்போதுமே பாதுகாப்பானது. உணவு என்பது பசிக்காக 80% ருசிக்காக 20% என பிரித்து சாப்பிட வேண்டும், ஆனால் ருசியே பிரதானமாகி , மேல்நாட்டு உணவுகளின் மேல் இருக்கும் மயக்கமும் அதிகரித்து விட்ட சூழ்நிலையில் நம்மில் பலர் ஒவ்வொரு வேளை உணவையும் ருசியாக இருந்தால் மட்டுமே சாப்பிடுவேன் என அடம்பிடிக்கிறார்கள். இது தவறு.

கம்பையும்,தினையையும், கேழ்வரகையும், அரிசியையும் ஒதுக்கிவிட்டு பீட்ஸா, பர்கர் சாப்பிடும் குழந்தைகளை பெருமையாக கருதும் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்தை குழி தோண்டி புதைக்கிறார்கள் என அர்த்தம். இட்லியையும், உப்புமாவையும் ஒதுக்கும் இளைஞர்கள் பரோட்டாவை சால்னா என்ற குழம்புடன் சாப்பிடும்போது, அவர்களது உடலில் இருக்கும் ஆரோக்கியமான செல்கள் குழம்ப ஆரம்பிப்பதை வசதியாக மறந்து விடுகிறார்கள்.

ஒவ்வொரு செல்லாய் பாதிக்கப்பட்டுத்தான், பாதிக்கப்பட்ட செல்கள் பல்கிப் பெருகி புற்று கட்டிகள் வருகின்றன. புற்றுநோய் என்பது ஏதோ ஓரிரு நாளில் வந்துவிடும் நோய் கிடையாது. பெரும்பாலான புற்றுநோய்கள் சராசரியாக 11 ஆண்டுகள் உடலில் மெல்ல மெல்ல வளர்ந்து அதன் பிறகு தான் அறிகுறியை காட்ட ஆரம்பிக்கின்றன. உணவுக்குழாய் புற்றுநோய் மேலை நாடுகளில் சர்வசாதாரணம். தற்போது இந்தியாவிலும் உணவுக்குழாய் புற்றுநோய் பெருக ஆரம்பித்திருக்கிறது. செரிமான பாதைகளில் புற்றுநோய் வருவதற்கு முக்கிய காரணம் தவறான உணவுப் பழக்க வழக்கம்.

சரி அப்படியானால் ருசி என்பதையே மறந்து விட்டு சப்பென்ற உணவுகளை மட்டும்தான் சாப்பிட வேண்டுமா என பலர் கேட்கக்கூடும். ருசியும் முக்கியமே, ஆனால்

அதற்கு எந்த அளவுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதை பொறுத்ததுதான் ஆரோக்கியம். பீட்சாவோ, பர்கரோ, பரோட்டாவோ, நூடுல்சையோ, கேக்கையோ வாரத்தில், மாதத்தில் என எப்போதோ ஒருநாள் சாப்பிடுவதால் பெரிய பிரச்னை இல்லை. இந்த குப்பை உணவுகளை அடிக்கடி சாப்பிடும்போதுதான் உடலில் குப்பை உணவுகள் அதிகம் சேர்ந்து உடல் பாதிப்பு அடைகிறது. நமது சமூகத்தில் எதாவது ஒரு உணவை யாராவது நல்லது என சொல்லிவிட்டால் உடனே எல்லோரும் ஒட்டுமொத்தமாக சென்று அந்த உணவை சாப்பிட ஆரம்பித்து விடுகிறார்கள். பிறகு கொஞ்ச நாளிலேயே எந்த முன்னேற்றமும் இல்லையே என விசும்புகிறார்கள்.

அரிசி, மீன், அசைவம், முட்டை, சிறுதானியம், பருப்பு வகைகள், நட்ஸ், காய்கறிகள், பழங்கள் என எல்லாவற்றையும் சரிவிகிதத்தில் அளவாக சாப்பிடுவதுதான் நல்லது. ஒரே வகை உணவை தொடர்ந்து சாப்பிடுவதை விட ஒவ்வொரு நாளும் வெவ்வேறு வெரைட்டி உணவுகளை சாப்பிடலாம். ஒரு நாள் அரிசிப் பொங்கல் சாப்பிட்டால், இன்னொரு நாள் சாமைப் பொங்கல், மற்றொரு நாள் ரவைப் பொங்கல் என மாற்றி மாற்றி சாப்பிடவேண்டும்.

உலகில் எந்தவொரு உணவிலும் எல்லா சத்துக்களும் இருப்பது கிடையாது. எனவே உணவை அணுகுவதில் நமது பார்வை மாற வேண்டும். சரிவிகித உணவுகளுக்கு முக்கியத்துவம் தரவேண்டும். வெறும் மாவுச் சத்து நிறைந்த உணவுகளை புறக்கணிக்க வேண்டும். நார்ச் சத்துள்ள உணவுகளை சாப்பிடவேண்டும். ஹோட்டல் உணவுகளை எப்போதாவது சாப்பிடுவதில் எந்த தவறும் கிடையாது. ஆனால் எப்போதும் ஹோட்டல், எப்போதும் ஃபாஸ்ட் ஃபுட் என்றால் உங்களுக்கு எமன் நீங்கள்தான்"

உணவு குறித்த பார்வையும், ஆரோக்கியமான விவாதங்களும், மாற்றமும் நம்மிடமிருந்து தான் தொடங்கவேண்டும்.

# நுகர்வோர் தீர்ப்புகள்
# காப்பீட்டு நிறுவனம் நஷ்ட ஈடு வழங்க உத்தரவு

வெளிநாட்டில் அறுவை சிகிச்சை செய்த பெண்ணுக்கு மருத்துவ இழப்பீடு வழங்காத தனியார் காப்பீட்டு நிறுவனம் ரூ.11 லட்சம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சென்னை வேளச்சேரியை சேர்ந்தவர் திருமதி. உமா. இவர் தனியார் காப்பீட்டு நிறுவனத்தில் கடந்த 2004ஆம் ஆண்டு மருத்துவ காப்பீடு திட்டத்தில் சேர்ந்தார்.

இந்த திட்டத்தின் கீழ் ப்ரீமியம் தொகையாக ரூ.8018 செலுத்தினார். இத்திட்டத்தில் பொது மற்றும் பல் மருத்துவ சிகிச்சை பெறலாம்.

இந்நிலையில் தனது மகளை பார்க்க அமெரிக்கா சென்றார். அங்கு அவருக்கு திடீரென உடல் நலம் பாதிக்கப்பட்டது. அங்குள்ள மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து கொண்டார்.

சிகிச்சைக்கு பின்னர் நாடு திரும்பிய உமா, மருத்துவ காப்பீடு செய்த நிறுவனத்தில் அறுவை சிகிச்சைக்கு செலவழித்த தொகையை தனக்கு வழங்கும்படி கடிதம் கொடுத்தார்.

ஆனால் திடீர் விபத்துகளுக்கு மட்டுமே காப்பீடு பணம் வழங்கப்படும் என்றும், இதுபோன்ற அறுவை சிகிச்சைகளுக்கு காப்பீடு கிடையாது என்றும் காப்பீட்டு நிறுவனத்திடம் இருந்து உமாவுக்கு பதில் வந்தது.

இதைத் தொடர்ந்து சென்னை வடக்கு நுகர்வோர் நீதிமன்றத்தில் உமா வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதி ரோசய்யா, பாதிக்கப்பட்ட திருமதிஉமாவுக்கு காப்பீட்டு நிறுவனம் நஷ்டஈடாக ரூ.11,51,469 வழங்க வேண்டும். மேலும், உடனடியாக பணம் வழங்காமல் மன உளைச்சலுக்கு ஆளாக்கியதால் ரூ.50 ஆயிரமும், வழக்கு செலவு தொகையாக ரூ.3 ஆயிரமும் வழங்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார்



# தபால் அதிகாரிகள் நஷ்ட ஈடு தொகையாக 6,000 ரூபாய் வழங்க வேண்டுமென நுகர்வோர் கோர்ட் தீர்ப்பு

காப்பீடு திட்டத்திற்கு சரியான தொகை வசூலிக்காத தபால் அதிகாரிகள் நஷ்ட ஈடு தொகையாக 6,000 ரூபாய் வழங்க வேண்டுமென நுகர்வோர் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது.

கடலூர் சிப்காட் மாரியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்தவர் சவுரிராஜன். இவரது மகள் சுகுணா. இவர் தபால்துறை அறிமுகப்படுத்திய காப்பீடு திட்டத்தில் சேர முடிவு செய்தார். அதற்காக சிப்காட் தபால் நிலையத்தை அணுகி 50 ஆயிரம் ரூபாய் பாலிசி எடுக்க வேண்டுமென கோரினார்.தபால் அலுவலர் 146 ரூபாய் பிரிமியம் செலுத்த வேண்டும் என தெரிவித்தார். அதன்படி சுகுணா விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து கடந்த 2006ம் ஆண்டு பிப். 17ம் தேதி பணம் செலுத்தினார். பல நாட்கள் ஆகியும் பாலிசி பத்திரம் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக விசாரித்ததில் பாலிசி பிரிமியம் 153 ரூபாய்க்கு பதில் 146 ரூபாய் செலுத்தப்பட்டது. வித்தியாச தொகை 7 ரூபாய் செலுத்த வேண்டும் என கூறினார். அதன் படி சுகுணா மீண்டும் அதே ஆண்டு ஜூலை 6ம் தேதி வித்தியாச தொகையை செலுத்தினார்.அதன் பிறகும் பாலிசி பத்திரம் வரவில்லை. அதற்கு பதிலாக தபால் துறை தலைவரிடம் இருந்து அதே ஆண்டு ஆக. 27ம் தேதி கடிதம் வந்தது. வித்தியாசத் தொகை 7 ரூபாயை 2006 ஜூன் 30ம் தேதிக்குள் செலுத்தாததால் காப்பீடு ரத்து செய்யப்பட்டுவிட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. சுகுணா தபால்துறைக்கு 2006 ஜூன் 3ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என எந்த கடிதமும் வரவில்லை. பாலிசி எடுக்கும் போதே கேட்கப்பட்ட 146 ரூபாய் தான் செலுத்தப்பட்டுள்ளது என சுகுணா கடலூர் நுகர்வோர் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நுகர்வோர் மன்ற நீதிபதி கணேசன், உறுப்பினர்கள் கலையரசி, பாண்டியன் ஆகியோர் தபால் துறை அலுவலர்கள் 2006 ஜூன் 30ம் தேதிக்குள் வித்தியாச தொகை செலுத்த வேண்டும் என அறிவிப்பு செய்யாதது சேவை குறைபாடாகும். இதனால் சுகுணாவுக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்காக நஷ்ட ஈடாக 5,000 ரூபாயும், வழக்கு செலவுக்காக 1,000 ரூபாயும் 2 மாதத்திற்குள் அளிக்க வேண்டும். இந்தத் தொகையை சிப்காட் தபால் நிலைய அதிகாரியும், கடலூர் தபால் கண்காணிப்பாளரும் கூட்டாக அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.



# ரெயில் பயணம் செய்த பயணியின் பைகளை எலி கடித்து குதறிய வழக்கில் பாதிக்கப்பட்டோருக்கு ரூ. 15 ஆயிரம் நஷ்ட ஈடு

ரெயில் பயணம் செய்த பயணியின் பைகளை எலி கடித்து குதறிய வழக்கில் பாதிக்கப்பட்டோருக்கு ரூ. 15 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்க ரெயில்வேக்கு புதுடெல்லி நுகர்வோர் (பூசல்கள்) குறை தீர்ப்பாணையம் உத்தரவிட்டுள்ளது.

டெல்லியை சேர்ந்த பன்சால் என்பவர் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 8ம் தேதி டெல்லியில் இருந்து கேரளா மாநிலம் ஏர்ணாகுளத்திற்கு வந்தார். அவர் ரெயிலில் வந்தபோது அவரது ஆடைகள் இருந்த பைகளை ரெயிலில் இருந்த எலிகள் கடித்து குதறியது. அவரது துணிகளை எலிகள் துண்டு துண்டாக வெட்டியுள்ளது. இதனை பார்த்த பன்சால் மிகவும் அதிர்ச்சி அடைந்தார். ஓடும் ரெயிலில் எலிகள் செய்த அட்டகாசத்தால் அவரது துணிகள் எல்லாம் கிழிந்துவிட்டன. இதனையடுத்து பன்சால் ரெயில்வே கவனக்குறைவு தான் இதற்கு காரணம் என்று குற்றம் சாட்டி புதுடெல்லி நுகர்வோர் (பூசல்கள்) குறை தீர்ப்பாணையத்தைய் நாடினார். மேலும், என்னுடைய பொருட்கள் சேதம் அடைந்ததற்கு ரூ. 18, 400 நஷ்ட ஈடாக ரெயில்வேயிடம் பெற்று தரவேண்டும் என்று கேட்டு கொண்டார்.

இது தொடர்பாக விசாரித்த தீர்ப்பாணையம் பாதிக்கப்பட்ட நபருக்கு ரூ. 15 ஆயிரம் நஷ்ட ஈடு வழங்க ரெயில்வேக்கு உத்தரவிட்டது. ரெயில்வே பணிமனையில் ரெயில்வே ஊழியர்கள் அலட்சியம், காரணமாக ரெயில் பெட்டிகள் முறையாக பராமரிப்பு இல்லாததால் இந்து நடந்துள்ளது. இந்த குறைபாடு ரெயில்வே மற்றும் ரெயில்வே மேற்பார்வை அதிகாரிகளுக்கு விளைவை ஏற்படுத்தும். முறையான பராமரிப்பு மற்றும் சுத்தமாக இல்லாத ரெயில் பெட்டியால் பயணத்தின் போது தேவையற்ற இழப்புகள் ஏற்படுகிறது. எனவே, பெரிய ரெயிவே சந்திப்புக்களில் மேற்பார்வில் குறைபாடுகள் மற்றும் முறையான பராமரிப்பு இல்லாததற்கு வடக்கு ரெயில்வே கோட்ட ரயில்வே மேலாளரே பொறுப்பு.

இம்மார்க்கத்தில் நூற்றுக்கணக்கான ரெயில்கள் தினமும் வந்து செல்கின்றன. லட்சக்கணக்கான பயணிகள் பல்வேறு பகுதிகளுக்கு செல்கின்றனர். என்று தீர்ப்பாணையம் கூறியுள்ளது.



# வாசகர் கடிதங்கள்

அன்புள்ள நுகர்வோர் கவசம் ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் அருமை. பள்ளி செல்லும் குழந்தைகளின் பெற்றோருக்கு நல்ல பயன் உள்ள தகவல்களை விளக்கமாக வழங்கிய குழுவிற்கு நன்றி. மைதா மாவின் ஆபத்தினை தெரிந்து கொண்டேன். கூடுதல் மின்சார தேவையை சரிப்படுத்த சூரிய மின் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும். விவசாய நிலங்கள் பாதுகாக்க வேண்டும். நகரங்களில் அதிகம் மரம் வளர்க்க வேண்டும். மருந்துகள் விலைக்குறைப்புக்கு அரசுக்கு நன்றி. ரேசன் கடை முறைகேட்டை தடுக்க புதிய முறை மிகச் சிறந்தது. சொத்துப் பத்திரங்கள் பற்றிய தகவல் பயனுள்ளது. மாட்டுப்பாலின் நிலை கொடுமையாக உள்ளது. சித்த மருத்துவ தகவல் அருமை. தகவல் அனைத்துமே அருமையாக உள்ளது. நுகர்வோர் கவசம் சிறப்பாக செயல்படவும் மேலும் பல தகவல்கள் எங்களுக்கு வழங்கவும் வாசகர் கடிதங்கள் மூலமாக எனது அன்பையும் ஆதரவினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கதிர்வேல்,**
வெள்ளகோயில்

பள்ளி செல்லும் குழந்தைகளை வாகன ஓட்டுனர்கள் பெற்றோர் ஆசிரியர் எப்படி பாதுகாப்பாக கவனித்துக் கொள்ள வேண்டும் என கூறியது குறிப்பாக பெற்றோருக்குத் தெரிய வேண்டிய விஷயம். வீட்டில் தனியாக இருக்கும் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை பற்றி சொல்லியிருப்பது பெண்களை கவரும். தவறான விளம்பரங்களைனால் மக்கள் எவ்வாறு ஏமாற்றப்படுகிறார்கள் என்றும் தவறான விளம்பரத்தை தடை செய்ய ஆவண செய்ய வேண்டும் என கூறியுருப்பது அருமை. சொத்து பத்திரங்கள் தொலைந்து விட்டால் என்ன செய்ய வேண்டும் என தாங்கள் அளித்த விளக்கம் அருமை.

திரு. **கோமதி நாயகம்,**
மதுரை

பள்ளி செல்லும் குழந்தைகளின் கவனத்திற்கு சிறப்புக்கட்டுரை பள்ளி குழந்தைகள், பெற்றோர்களுக்கு குறிப்பாக பள்ளி நிர்வாகம் எவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டும், புகார் பற்றிய செய்தி, உதாரணத்துடன் கூடிய தீர்வுகள் பயனுள்ளதாய் அமைந்தது. சொத்துப் பத்திரங்களை தொலைத்து விட்டால் தீர்வு காண்பது பற்றி கூறியது குறிப்பாக விவசாயிகளுக்கு பயன் தரத்தக்கதாய் அமைந்த்து. தண்ணீரை சேமிக்க வீட்டு குறிப்புகள் நீரின்றி அமையாது உலகு என கூறுவதற்கு சேமிப்பின் அவசியமான வழிமுறைகளை கூறியுள்ளதும் மழைநீரை சேமிக்கவும் கூறியதுடன் தண்ணீரை அளக்கும் கருவி பொருத்த சொன்னது, அளவை தெரிந்து விழிப்போடு இருக்க உதவும்.



திரு. **பா.மா.வெங்கடாசலபதி,** ஈரோடு

அன்பார்ந்த நுகர்வோர் கவசம் ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். நுகர்வோர் கவசத்தில் வரும் அனைத்து தகவல்களுமே மிகுந்த பயன் அளிப்பதாக அமைந்து வருகிறது. அனைத்து கட்டுரைகளுமே ஏதேனும் ஒரு வகையில் நமது அன்றாட வாழ்விற்கு உகந்ததாகவே அமைந்து வருகிறது. உங்களது தகவல் அனைத்தையும் நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

எனக்கு மிகவும் பிடித்த பகுதி நுகர்வோர் நலன் மற்றும் நுகர்வோர் தீர்ப்புகள் பகுதியாகும். அனைத்து மக்களும் பயன் பெறும் வகையில் தாங்கள் நுகர்வோர் கவசம் புத்தகத்தினை வெளியிட்டு வருவதற்கு எனது மனமார்ந்த நன்றி மற்றும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஹரிகிருஷ்ணன்,**
மதுரை

# பொது அறிவு வினாக்கள்

1. **வானவில்லில் இடம்பெறாத நிறம் எது?**

| | |
|---|---|
| சிவப்பு | வைலட் |
| பிங்க் | மஞ்சள் |

2. **பூமி எதனை சுற்றி வருகிறது**

| | |
|---|---|
| நிலா | வீனஸ் |
| சூரியன் | செவ்வாய் |

3. **ஆரஞ்சு பழத்தில் நிறைந்திருக்கும் விட்டமின்**

| | |
|---|---|
| விட்டமின் ஏ | விட்டமின் சி |
| விட்டமின் கே | விட்டமின் டி |

4. **உடலின் எந்த உறுப்பு ரத்தத்தை சுத்திகரிக்கிறது?**

| | |
|---|---|
| மூளை | மூக்கு |
| சிறுநீரகம் | குடல் |

5. **1 அடி =**

| | |
|---|---|
| 12 இன்ச்சஸ் | 14 இன்ச்சஸ் |
| 15 இன்ச்சஸ் | 11.5 இன்ச்சஸ் |

6. **DVD என்றால் என்ன?**

டிஜிட்டலி வொலட்டைல் டிஸ்க்
டிஜிட்டலி வியபல் டிஸ்க்
டிஜிட்டல் வெர்சடைல் டிஸ்க்
டிமேன்ட் விடியோ டிஸ்க்

7. **இந்திய தேசியக் கொடியில் உள்ள காவி நிறம் எதனைக் குறிக்கிறது?**

| | |
|---|---|
| தியாகம் | எதிர்மறை |
| அமைதி | வளம் |

8. **SMS–ன் விரிவாக்கம் என்ன?**

ஷார்ட் மெசேஜ் சர்விஸ்ஸ்மால்
மெசேஜ் சென்டிங்
ஷார்ட் மெசேஜ் சின்டிகேஷன்
ஷார்ட் மெசேஜ் ஸ்டோரி

9. **தற்போது நடக்கவிருக்கும் ஒலிம்பிக் பந்தயம் எங்கு நடைப்பெற உள்ளது?**

| | |
|---|---|
| ரியோ | லண்டன் |
| அமெரிக்கா | ஜப்பான் |

10. **100 என்ற தொலைபேசி எண் யாரை அழைக்க பயன்படுகிறது?**

| | |
|---|---|
| ஆம்புலன்ஸ் | மருத்துவர் |
| ராணுவம் | காவல்துறை |

# சென்ற இதழில் வெளியான புதிருக்கு சரியான பதில் அளித்தவர்கள்

1. **ஹரிகிருஷ்ணன்**, மதுரை
2. **பிரித்வி**, மதுரை
3. **தினேஷ்**, காரைக்குடி
4. **பூங்கனி**, சிவகங்கை
5. **கணகமணி**, சென்னை
6. **கல்யாணி**, தஞ்சாவூர்
7. **நாகநாதன்**, கடலூர்
8. **ரிஷிவர்தன்**, மதுரை
9. **அர்ச்சனா**, மயிலாடுதுறை
10. **கனிமொழி**, தேனி

குறிப்பு: இப் போட்டியில் கலந்து கொள்வோர் விடைகளை 08-08-2016 க்குள் **"தமிழ்நாடு நுகர்வோர் கவசம்"** குறுக்கெழுத்துப் **போட்டி, 3/242, ராஜேந்திரா கார்டன், வெட்டுவாங்கேணி, சென்னை – 600115** என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். சரியான விடை அனுப்பும் நுகர்வோர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 10 பேருக்கு பரிசுகள் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

அனுப்புபவர்: பெயர்.............................................................

முகவரி:.............................................................

.............................................................

அஞ்சல் குறியீடு.............................................................

தொலைதொடர்பு எண்.............................................................

# தமிழ்நாடு நுகர்வோர் கவசம் சந்தாதாரர் படிவம்

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| .............................................................................................<br>.............................................................................................<br>.............................................................................................<br>............................................................................................. | ஆணையாளர்,<br>உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,<br>எழிலகம், 4வது தளம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை - 600 005 |

அய்யா,

தமிழ்நாடு நுகர்வோர் கவசம் எனும் நுகர்வோர் விழிப்புணர்வு மாத இதழை, எனது முகவரிக்கு அனுப்பி வைக்கக்கேட்டு அதற்கான சந்தா தொகையை Tamilnadu Nugarvor Kavasam எனும் பெயரில் அனுப்பியுள்ளேன்.

## சந்தாதாரர் மற்றும் சந்தா தொகை விபரம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சந்தாதாரர் பெயர் | | | |
| 2. | சந்தாதாரர் முகவரி | | | |
| 3. | தொலைபேசி / கைபேசி எண் | | | |
| 4. | மின்னஞ்சல் முகவரி | | | |
| 5. | செலுத்தப்படும் சந்தா தொகை (✓செய்யவும்) | ஓராண்டு | மூன்றாண்டு | ஐந்தாண்டு |
| | | ரூ.100/- | ரூ.300/- | ரூ.500/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | Tamilnadu Nugarvor Kavasam எனும் பெயரில் சந்தா தொகை செலுத்திய விவரம் | மணியார்டர் E-Money order | காசோலை Cheque | வரைவோலை Demand Draft |
| | | ரசீது எண் | Bank | Bank |
| | | அனுப்பிய நாள் | No. | No |
| | | | Date | Date |

சந்தாதாரர் கையொப்பம்

---

### அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

திரு.................................................................................... என்பவர் செலுத்திய சந்தா தொகை ரூ............................/- (ரூபாய்...................................................................................மட்டும்) பெற்றுக்கொள்ளப்பட்டது. மனுதாரரின் சந்தாதாரர் எண்................................ ஆகும். 2016...................... மாதம் முதல்..................... மாதம் வரை இவருக்கு தமிழ்நாடு நுகர்வோர் கவசம் மாத இதழ் தபாலில் அனுப்பிவைக்கப்படும். மாத இதழ் கிடைக்கவில்லை என்றால் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலக நு.வி. பிரிவு கண்காணிப்பாளரை தொலைபேசி எண்: 044 - 28583322, 28583222, 28583422, 28583272 தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம்.

இடம்: சென்னை - 600 005.

நாள்:..........................................

ஆணையாளருக்காக
உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்
பாதுகாப்புத் துறை,

DATE OF PUBLICATION EVERY MONTH 18TH
REGISTERED UNDER RNI NO. TNTAM/2008/24148
R. DIS. NO.1361/2014
POSTAL CONCESSION REGISTERED UNDER TN/CH © / 415/16-18
WPP.LIC.NO.TN/PMG (CCR) /WPP -231/2016 -18
Licensed to post without prepayment



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 14.06.2016 அன்று புதுடெல்லியிலுள்ள பிரதமர் இல்லத்தில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களை சந்தித்து, தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த கோரிக்கை மனுவை வழங்கி ஆலோசனை செய்தார்கள்.

## வெளியிடுவோர்

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி - 044 - 28583222, மின்னஞ்சல் ccs@tn.gov.in